விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 11 வியாழக்கிழமை (28.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க் குற்றங்கள் தொடர்பில் பொதுவான விசாரணை தேவை



## பிரிட்டிஷ் பிரதமர் வேண்டுகோள்

(லண்டன்)

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்ததாக குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து உறுதி செய்வதற்கு சர்வதேச, பக்கசார்பற்ற விசாரணை ஒன்று அவசியம் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரான சிவோன் மக்டொனால்ட் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)



இந்தோனேசியாவில் இடம்பெற்ற சுனாமியால் சின்னாபின்னமாகியுள்ள வீடு...

## வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோர் இந்திய வியாபாரிகள் 20 பேரை அழைத்துச் சென்றதால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மற்றும் அதன் அண்டிய பகுதிகளிலுள்ள விடுதியில் தங்கியிருந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுமார் 20 இந்திய வியாபாரிகள் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு வெள்ளை வானில் வந்தோரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்து நீண்டகாலமாக இந்திய வியாபாரிகள் யாழ். மாவட்டத்தில் புடைவை வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகைதரும் இவ் வியாபாரிகள் வியாபார (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி கல்வி வலயம் பணியாளர்கள் பகிஷ்கரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா இடமாற்றம் செய்யப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை பணியாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் கல்வி வலயப் பணிகள் நேற்று ஸ்தம்பிதமடைந்தன. இதனை அடுத்து கல்விப் பணிமனைக் (16ஆம் பக்கம் பார்க்க)

## செல்வா சதுக்கத்திலிருந்த பயன்தரு மரங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நூலகத்துக்கு அருகிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் வைக்கப்பட்டிருந்த பூமரங்கள் மற்றும் வாழை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இது திட்டமிட்டசெயல் என தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட செயலாளரும் நிர்வாக செயலாளருமான எஸ்.எக்ஸ்.குலநாயகம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்.நூலகப் பின்பகுதியில் செல்வா சதுக்கத்துடன் இணைக்கும் மதில் உடைந்துள்ள நிலையில் அதன் ஊடாகச் சென்று இம் மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சதுக்கத்துக்குள் நின்ற வாழை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு அவை (16ஆம் பக்கம் பார்க்க)

## மெனிக் பாமில் பௌத்தவிகாரை

(வவுனியா)

விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த மெனிக்பாம் முகாமிற்குள் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள வலயம் 03 அருணாச்சலம் முகாமிலேயே இவ்வாறு பௌத்த விகாரை அமைக்கப்படவுள்ளது.

இந்தப்பகுதியில் இருக்கும் பௌத்த பிக்கு ஒருவர் குறித்த மெனிக்பாமின் அருணாச் (15ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா கொலைமுயற்சி வழக்கு எதிரிக்கு 290 வருட கடூழியச்சிறை

(கொழும்பு)



1999ஆம் ஆண்டு கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் இறுதிக் கூட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயன்றதை ஒப்புக்கொண்ட நபருக்கு 290 வருட கடூழிய சிறைத் தண்டனையை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி விதித்தார்.

கொழும்பு நகரசபை மண்டப வளவில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் (16ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரப் பலகை பொருத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை

(கொழும்பு)

கொழும்பு நகரில் விளம்பரப் பலகைகளை பொருத்தவேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னர் இதற்கான அனுமதிகளை கொழும்பு மாநகரசபை வழங்கி வந்தது.

இனிமேல் விளம்பரப் பலகைகளை வைப்பதற்கான விண்ணப்பங்களை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெறவேண்டும் என கொழும்பு மாநகர விசேட ஆணையாளர் ஓமர் காமிலுக்கு உயர் மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பரிந்துரை கிடைத்த பின்னரே பாதுகாப்பு அமைச்சு அனுமதியை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அரசாங்கத்தில் இந்த நடவடிக்கையினால் கொழும்பு மாநகரசபைக்கு கிடைத்து வந்தவருமானம் இல்லாமல் போகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு நகரில் உள்ள சகல பாதுகாப்பு காவலரண் களையும் அகற்றும் நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல (16ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் பதிவு கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

மீள்குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதால் இடம்பெயர்ந்தவர்களை வாக்காளராக பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை தேர்தல் திணைக்களம் நவம்பர் இறுதிவரை நீடித்துள்ளது என தேர்தல் ஆணையாளர் அலுவல அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆயினும் நாட்டின் மற்றைய பகுதிகளில் வாக்காளர் பெயரெடுப்பு முடிந்து (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை யாழில் நான்கு நாட்கள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் 11 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை 4 நாட்கள் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றம் நல்லிணக்க ஆணைக்குழு நாட்டில் பல்வேறு தரப்பினரிடம் இனப்பிரச்சினை, போரின் பாதிப்புக்கள் குறித்து சாட்சியங்களைப் பெற்றுவருகிறது.

யாழ்.மாவட்ட மக்களிடம் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை 4 நாட்கள் சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு செயலகபிரிவு குருநகர் கலாசார மண்டபத்திலும், முற்பகல் 11.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக பிரிவு மக்களிடம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்திலும், பி.ப. 2.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மக்களிடம் நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளது. மறுநாள் 12ஆம் திகதி காலை (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை

(கரவெட்டி)

கரவெட்டி ஞானசாரியன் இந்து மயானத்தில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு சந்தேக நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மேமாதம் 15ம் திகதி ஞானசாரியன் இந்து மயானத்தில் வைத்து அடித்து கொலை செய்யப்பட்ட நல்லையா பாஸ்கரன் (வயது 44) என்பவரின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில்நான்குபேர்கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று பருத்தித்துறை நீதவான் ஜோய் மகிழ் மகாதேவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவ்வழக்கைவிசாரித்த நீதவான், நான்கு பேரும் தலா 5 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ச-24)

## 'திருஞானம்' பவளமலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையின் பவள விழாவை முன்னிட்டு "திருஞானம்" பவள மலர் நூல் வெளியிட்டுவிழா எதிர் வரும் 31ம் திகதி பி.ப 2.00 மணிக்கு வித்தியாலய மண்டபத் தில் அதிபர் செல்வி த.பொன்னம்பலம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாட்பேராசிரியர் சி.தில்லை நாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக, உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், கௌரவ விருந்தினராக வைத்தியகலாநிதி வை.சு.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை9.00 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்திற்கு சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.கல்விவலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

அத்துடன் தங்களது பாடசாலைகளுக்கு 2011 ஆம் ஆண்டுக்குத் தேவையான வரவு இடாப்பு எண்ணிக்கையின் விபரங்களையும் கொண்டு வருமாறு அவர் கேட்டுள்ளார். (ச)

## அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிகாரிகளை காரணமின்றி இடமாற்றுவது ஏற்புடையது அல்ல

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கிளிநொச்சிவலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா திடீர் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டமை ஏற்புடையதல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கல்விப்பணிப்பாளரின் இடமாற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் இராணுவ நிர்வாகச் செயற்பாடுகள் போன்றே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போர்க்காலத்தில் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றிய அதிகாரிகள் போதிய காரணங்களின்றி இடைநிறுத்தப்படுகின்றமை அவர்களை மிகுந்த மன உளைச்சலுக்கு உட்படுத்துவதுடன் ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளையும் இடையூறுக்கு உட்படுத்துகின்றது.

நடைபெற்ற வன்னிப் போரின் இறுதிக்காலப்பகுதியில் தனது ஒரேயொரு பிள்ளையையும், மனைவியையும் இழந்த முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.தேவேந்திரன் சரியான காரணமின்றி திடீர் பணிமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டார்.

அதேபோல ஏழை விவசாயிகளுக்காக குரல்கொடுத்துவந்ததால்கிளிநொச்சி உதவி விவசாய விரிவாக்கல் பணிப்பாளர் சீதாலட்சுமி ஆனந்தராஜாவின் பதவியும் பறிக்கப்பட்டதாக விவசாயிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர்த.குருகுலராஜா பணி இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதாக வடமாகாண ஆளுநரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அவர் பதவியில் இருந்து விலக்கப்படுவதற்கும் சொல்லப்பட்ட காரணமும் உரிய காரணமல்ல. தர்மபுரி இல-01 பாடசாலையின் கட்டத்தினை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநரால் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது. குறித்த பாடசாலையினை கட்டிமுடிக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டே கல்விப்பணிப்பாளருக்கான பணி இடமாற்றம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாடசாலை கட்டுவதற்குரிய நிதியறிக்கை கல்வி அமைச்சருக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அதற்கான பதிலோ, நிதியோ வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் பாடசாலைக்கட்டம் அமைக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டு கல்விப்பணிப்பாளர் ஒருவரைபணி இடமாற்றுவது பொருத்தமற்ற முடிவாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய தரப்புக்களைக் கேட்டுக் கொள்கின்ற அதேவேளை, கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தனது ஓய்வுக்காலம் வரையில் குறித்த கல்வி வலயத்தில் பணியாற்ற வட மாகாண ஆளுநர் அனுமதி வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கிறது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஏ)

### சகல அரச நிறுவனங்களையும்

## தனியார் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்ள திறைசேரி பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட அனைத்து வகையான அரச நிறுவனங்களினதும் பாதுகாப்புப் பணிக்கு ரக்னா லங்கா தனியார் பாதுகாப்புச் சேவை, நிறுவனத்தின் சேவையைப் பெற்றுக் கொள்ளுமாறு திறைசேரி உத்தரவிட்டுள்ளது.

பிரஸ்தாப பாதுகாப்புச் சேவை நிறுவனமானது பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு உரித்தான தனியார் நிறுவனமென தெரிவிக்கப்படுகிறது.

அதன் பிரகாரம் இனிவரும் காலங்களில் எந்த அரச நிறுவனத்திற்கும் வேறு தனியார் நிறுவனங்களின் பாதுகாப்புச் சேவையைப்பெற்றுக் கொள்ள முடியாது. கட்டணம் அதிகமாக இருந்த போதிலும் ரக்னா லங்கா நிறுவனத்தின்சேவையை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து அரச நிறுவனங்களும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், டெலிகொம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவை ஊழியர்களே பணியில் அமர்த் தப்பட்டுள்ளனர்.

அரச நிறுவனங்கள் அனைத்திலும் தனியார் நிறுவனமொன்றின் சேவையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நிர்ப்பந்திக்கப்படும் சுற்றுநிருபம் ஒன்று விடுக்கப்பட்டுள்ளமை இதுதான் முதல் தடவை என்பதாக தெரியவருகின்றது. (ச-5)


செல்லா சினிமா

பசங்களுக்கு ஜாலியான படம்

காட்சி நேரம்

10.30 ,2.30 ,6.30




**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)



## நல்லூர் பிரதேச சபை

## அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கோண்டாவில் இருபாலை வீதியில் ஆதன இலக்கம் 287, 289 இற்கு உரிய ஆதனங்களை (கோண்டாவில் ஆயுர்வேத வைத்திய நிலையத்திற்கு முன்பாக) நல்லூர் பிரதேச சபை ஆயுர்வேத வைத்தியசாலையும் மூலிகைத் தோட்டமும் அமைப்பதற்காக கொள்வனவு செய்ய இருப்பதால் இவ் ஆதனங்களை யாரும் வாங்க வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி-1487)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
### இதழியல் டிப்ளோமா கற்கை நெறி
## Diploma in Journalism
### கல்வியாண்டு 2010 / 2012

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படும் பகுதிநேர மற்றும் முழுநேர இதழியல் டிப்ளோமாக் கற்கைநெறிக்கு 15.09.2010 அன்று பத்திரிகைகளில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 10.11.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் ரூபா 100/= செலுத்திப் பெற்று பற்றுச்சீட்டினை பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
இல.84, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.:021 2229873

பதிவாளர்
27.10.2010

(சி-1486)



## யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்
## தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2010

சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



நி.துவாரகன்
153



க.இளங்குமரன்
152



கே.டிலக்ஷனா
150



அ.அனார்த்தனி
147

வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளியைப் பெற்ற மாணவி - பு.பவதாரணி - 141

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம் :-**

| | | |
|---|---|---|
| ச.பிரியங்கன் - 134 | இ.துபாறஷன் - 123 | சி.டினிசன் - 105 |
| இ.ஜதுஷா - 133 | ஸ்ரீ.பிரதீபன் - 122 | ஸ்ரீ.பவதாரணி-103 |
| த.லதுர்சன் - 131 | ஆ.மேனகா - 121 | ச.அபிமிதா - 103 |
| சி.திசான் - 126 | ச.சிந்துஜா - 118 | சு.நிதாபன் - 100 |
| ஜெ.டிலக்ஷன் - 125 | க.கிருத்திகா - 107 | |

இம்மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்.

(2755)



## வலி-தென் மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
### சண்டிலிப்பாய்

## பால் கொள்வனவு, விற்பனை நிலையம் திறப்பு விழா

மேற்படி எமது சங்கத்தின் மூன்றாவது பரல் கொள்வனவு, விற்பனைக் கிளை நவாலி கிழக்கில் இன்று மு.ப.11.30 மணியளவில் ஆரம்பிக்கவுள்ளோம். அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

(2758)

# இன்று ஒரு தகவல்

## மரமும் மனிதனும்

ஒரு ராஜா தன் பரிவாரங்களுடன் காட்டு வழியாக போய்க் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் அமைச்சரும் சேவகர்களும் போய்க் கொண்டிருந்தனர்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல்'விர்' என்று வந்து ராஜாவின் நெற்றியில் பட்டுவிட்டது. அவர் நெற்றியைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

பக்கத்திலிருந்தவர்களெல்லாம் பதறிப் போனார்கள். ராஜா மீது ஒரு கல் பட்டு விட்டதென்றால் அது சும்மாவா?

"எங்கிருந்து அந்தக்கல் வந்திருக்கும்"என்று தேடிக் கொண்டு எல்லோரும் நாலா புறமும் ஓடினார்கள். அமைச்சரும் ஒரு பக்கம் ஓடினார்.

அங்கே ஒரு சின்னப் பையன் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கல் வைத்திருந்தான்.

அமைச்சர் கோபமாக,"இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?"என்று கேட்டார்.

அவன் பயந்து விட்டான். மெதுவாக வாயைத் திறந்து "மாங்காய் பிடுங்கிக் கொண்டிருக்கிறேன்"என்றான்.

பக்கத்தில் பார்த்தார். ஒரு பெரிய மாமரம் இருந்தது. கீழே 2 மாங்காய் கிடந்தது.

அதனால் பையன் மாங்காய் பிடுங்குவதற்காக வீசிய கல் தான் மன்னருடைய நெற்றியில் வந்து பட்டிருக்கிறது. இருந்தாலும் இவனை சும்மா விட முடியுமா? பிடித்து இழுத்துக் கொண்டு வந்து ராஜாவுக்கு முன் நிறுத்தினார்.

"மன்னா! இவன் தான் கல் வீசினவன். இவனை சும்மா விடக் கூடாது. தண்டனை கொடுக்க வேண்டும்"என்று எல்லோரும் சொன்னார்கள்.

ராஜா யோசித்தார்."விசாரிக்காமல் தண்டனை கொடுப்பது தவறு"நாளைக்கு அரண்மனையில் விசாரணை செய்யலாம்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

மறுநாள், அரண்மனையின் உள்ளேயிருக்கும் விசாரணை மண்டபத்தில் எல்லோரும் கூடியிருந்தார்கள்.

அந்த சின்னப்பையனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ராஜா விசாரித்தார்.

"என்னப்பா... நீ அந்தக் காட்டில் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கேட்கிறார்.

"கல்லெறிந்து மாங்காய் பிடுங்கிக் கொண்டிருந்தேன்" என்றான் பையன்.

"எத்தனை மாங்காய் கிடைத்தது?"என்றார்.

"இரண்டு"என்றான்.

"நீ வீசிய கல் மரத்தின் மீது பட்டால் அதற்கு வலிக்கும் என்று உனக்குத் தெரியுமா?"என்றார்.

"தெரியாது"என்றான்.

"நீ வீசிய கல் மனிதன் மீது படும் என்பது உனக்குத் தெரியுமா?" என்றார்.

"தெரியாது"என்றான்.

ராஜா கொஞ்சநேரம் யோசித்து விட்டு பின் தீர்ப்பு சொன்னார்.

அந்தச் சின்னப் பையனைப் பார்த்து,

"உனக்குத் தண்டனை கிடையாது. உன்னை விடுதலை செய்கிறேன். நீ போய் வா"என்று சொல்லி விட்டார்.

அரண்மனையிலிருந்த எல்லோருக்கும் ஆச்சரியம்!

"என்ன இது... ராஜா இப்படிச் செய்துவிட்டாரே"என்று நினைத்தார்கள். இருந்தாலும் ராஜா தீர்ப்பு சொன்னால் சொன்னது தானே!

எல்லோரும் கலைந்து போய் விட்டார்கள். கடைசியாக அமைச்சர் மட்டும் அங்கு நின்று கொண்டிருந்தார்.

"என்ன அமைச்சரே! என்ன யோசனை?"என்றார் மன்னர். அமைச்சர் மெதுவாக"ம்... ஒன்றுமில்லை.... இந்தத் தீர்ப்பு..." என்று இழுத்தார்.

ராஜா சிரித்துக் கொண்டே சொன்னார்.

"அமைச்சரே! மரத்துக்கு அறிவில்லை. மனிதனுக்கு ஆறறிவு என்று சொல்கிறார்கள். ஒருமரம் தன் மீது கல்லெறிந்த ஒரு சிறுவனுக்கு 2 மாங்காயைப் பரிசாக கொடுத்திருக்கிறது.

ஒரு மனிதன் தன் மீது கல்லெறிஞ்ச ஒரு சிறுவனுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களே... இது சரியா?" என்று கேட்டிருக்கிறார் ராஜா. அமைச்சர் தலைகுனிந்தாராம்.

"அறியாமல் செய்யும் குற்றத்தை மன்னிக்கும் மனோபாவம் மனிதனுக்கு வேண்டும்" என்பதை வலியுறுத்துவதற்காகத் தான் இந்தக் கதை.

"இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனோபாவம் யாருக்குமே இல்லை சேர்"என்றான் ஒரு சின்னப் பையன்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"என்று கேட்டேன்.

"நான் கூட ஒரு மாமரத்தில் கல்லெறிந்தேன் சேர்... அது 2 மாங்காய் கொடுத்தது. அதற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதன் மீது அந்தக் கல் பட வேயில்லை. இருந்தாலும் அவன் தண்டனை கொடுத்து விட்டான் சேர்"என்றான்.

"என்ன தண்டனை?"என்றேன்.

"இரண்டு அறை"என்றான்.

"ஏன்டா அப்படி?"என்று கேட்டேன்.

"அந்த மரம் அவனுக்குச் சொந்தமாம் சேர். அது எப்படி எனக்குத்தெரியும்"என்கிறான் அந்தப் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## பவளவிழா மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையின் 'திருஞானம்' பவளவிழா மலர் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் செல்வி த.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வித்தியின் மைந்தன் வாழ் நாட் பேராசிரியர் சி.தில்லைநாதன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் பொ. கமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வித்தியின் மைந்தன் வைத்திய கலாநிதி வை.சு. சண்முக நாதன் கலந்து கொள்வார். (ஸ்ரீ-2)

## தலைமைத்துவமும் வினைத்திறனும் பற்றிய கருத்தரங்கு நாளை

யாழ். முகாமையாளர் சம்மேளனமும் இலங்கை பொறியியலாளர் சங்க வடபிராந்தியமும் இணைந்து நடத்தும் "தலைமைத்துவமும் வினைத்திறனும்" பற்றிய கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5 மணிவரை நல்லூர் கமநல சேவைகள் ஒழுங்கையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலாநிதி கே.குகதாசன் வளவாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## பலாலி ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை பெறுபேறுகள்

பலாலி ஆசிரிய கலாசாலையில் 2007/2008 கல்வியாண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவற்றை அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் என கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ் அறிவித்துள்ளார்.

அத்துடன் நுனசித்தி பெற்றோர் அவசரமாக அதிபரை சந்திக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

## பனையால் விழுந்த நபர் படுகாயம்

பனையால் விழுந்து படுகாயமடைந்த ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் வட்டக்கச்சியைச் சேர்ந்த செல்லையா செல்வராஜா (வயது 49) என்பவர் காலிலும் இடுப்பிலும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-10)

## இராசி பலன்

*28.10.2010*
*(ஐப்பசி 11, வியாழக்கிழமை)*
*பஞ்சமி முற்பகல் 7.45 மணிவரை*
*திருவாதிரை பின்னிரவு 12.47 மணிவரை*
*இராகுகாலம் 1.33-3.03 மணிவரை*
*சுபநேரம் 7.33-9.03 மணிவரை*

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள்,கொடுக்கல், வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முன்வருவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்** வருமானம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தி ஏற்படும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களால் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், இடமாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும், பிரயாணத்தில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுண்டு.

**சிங்கம்** இனிமையான நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பு கிட்டும், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**கன்னி** விடியும் பொழுதே நல்ல செய்திகள் வந்து சேரும் நாள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினருடன் விருந்து விழாக்களில் கலந்து மகழும் நாள்.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் ்் பழைய பொருட்களை மாற்றி புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதன் மூலம் அமைதியைப் பேணலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலத்தில் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்.

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறலாம், பயணத்தால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மகரம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் ்் கனிவான பேச்சுக்களால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பிரியமான சிலரின் சந்திப்பு கிட்டும், வரவு திருப்தி தரும்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், புது மனை கட்டும் எண்ணம் மேலோங்கும்.

**மீனம்** உடன் பிறப்புக்களால் உற்சாகம் பெருகும் நாள், உறவினரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம், சொத்து வாங்கும் எண்ணம் உருவாகும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள்.

வளவன்

## ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு காணியற்றோருக்கு இலவச காணிகள்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன் னிட்டு காணி இல்லாதவர்களுக்கு இலவச மாக காணிகள் வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது.

காணிகள் ஆணையாளர் திணைக்களம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 65 ஆவது பிறந்த நாள் மற்றும் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு காணியில்லாத வர்களுக்கு காணிகள் மற்றும் காணி உறுதி களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.



காணியில்லாதவர்கள் என மாவட்ட செய லகங்களில் பதிவு செய்யப்பட்டவர்களுக்கே இந்தக் காணிகளும் உறுதிகளும் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக காணிகள் ஆணையாளர் ஆர். பி.ஆர். ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் பேருக்கு காணி உரிமைகள் வழங்கப்படவுள்ளதுடன் காணியற்றவர்கள் தமது பிரதேச மாவட்ட செயலகங்களில் பதிவு செய்யுமாறும் கோரப் பட்டிருப்பதுடன் அரசாங்க காணிகளில் சட்ட விரோதமாக குடியிருப்பவர்களை வெளியேற்று வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என காணிகள் ஆணையாளர் மேலும் தெரி வித்தார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 110 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 |
| தக்காளி | 80 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 60 | 100 | 80 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 60 | 70 |
| கறிமிளகாய் | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 150 |
| போஞ்சி | 100 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |


அருள்மிகு ஆனைக்கோட்டை வள்ளி தேவசேனா சமேத பாலசுப்பிரமணிய ஆலயத்தில் (மூத்த நயினார் திருக்கோவில்) நேற்று நடைபெற்ற கும்பாபிஷேகக் காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்:-நவாலி செய்தியாளர்)

## குருத்துவ அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு, வன்னி, யாழ்ப்பாணப் பகுதிகளில் பணியாற்றுகின்ற அருட்சகோதரர்களான மோகன் டானியல், ஜெயானந்தன், ஜோன் புவியரசன் மற்றும் தேவமித்திரன் ஆகியோருக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் திருச்சபைத் தலைவர் அருட்திரு அ.ஜெயக்குமாரன் தலைமையில் குருத்துவ அபிஷேக வழிபாடு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## கைவினைஞர்களுக்கான நவீன கைப்பணிப் பொருள் விருத்தி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் நாளை, நாளை மறுதினம் மற்றும் 31ஆம்திகதி கைவினைஞர்களுக்கான நவீன கைப்பணிப் பொருள் விருத்தி பயிற்சி நெறி யாழ். மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் இது தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் அந்தந்தப் பிரதேச செயலகத்திலோ அல்லது கைத்தொழில் அபிவிருத்தி சபை, யாழ்.மாவட்ட அலுவலகத்திலோ தொடர்புகொள்ளுமாறு கைத்தொழில் அபிவிருத்தி சபை மாவட்ட பதில் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி வடக்குப் பிரிவு நீண்டகாலமாக செயற்படாதுள்ளமையால் மீண்டும் வலி வடக்கு பிரிவுக் கிளையை செயற்படுத்தும் நோக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையால் அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தெல்லிப்பளை வலி வடக்கு பிரிவுக்கிளைக்கான இடைக்கால சபை உறுப்பினர் தெரிவுகள் இடம்பெற்றன.

இதில் தலைவராக டாக்டர் நா. சக்திவேல், செயலாளராக சி. நாகேஸ்வரன், பொருளாளராக சோ.செல்வரத்தினம் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக நா.ஜெயரத்தினம் , வை.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஸ்ரீ-134)

## வீதி புனரமைப்பு நடவடிக்கை

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி மாலுசந்தி வீதியில் முதலாவது கிலோமீற்றர் பகுதியில் தடுப்புச்சுவர் ஒன்று புனரமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்து வருகிறது.

வீதி அபிவிருத்தி திணைக்களத் தினால் வீதியைப் பாதுகாக்கும் நோக்கிலும் வீதியை அகலமாக்கும் நடவடிக்கையாகவும் இப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது.

இதேவேளை நீண்டகாலமாக செப்பனிடப்படாதிருந்த புறாப்பொறுக்கி உடுப்பிட்டி வீதியும் செப்பனிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

## அமெரிக்க சிலோன் மிஷன் திருச்சபையின் ஏற்பாட்டில் மரநடுகைத் திட்டம்

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை தன் தாய் சங்கமாகிய பிற நாடுகளுக்கு மிஷனரிமாரை அனுப்பும் சங்கத்தின் 200ஆம் ஆண்டு விழாவின் சிறப்பு நிகழ்வாக எதிர்வரும் 31ஆம் திகதியை மரம் நடும் நாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், வன்னி , வவுனியா, மட்டக்களப்பு , திருகோணமலை, மலையகப் பகுதிகளிலும் பயன்தரும் மரங்களை நடும் பணியை ஆரம்பிக்கின்றார்கள்.

இதில் விசேடமாக 5ஆயிரம் பனை விதைகள்நாட்டப்படவுள்ளன.

யாழ்ப்பாண சமூகம் இம் மிஷனரிமாருக்கு ஊடாக கிடைத்த நன்மைகளுக்காக சமய பேதங்களை மறந்து ஒவ்வொருவரும் தங்கள் காலங்களில் ஒரு பயன்தரும் மரமானது நடும்படி இம் மர நடுகை ஏற்பாட்டாளராகிய அருட் எ.எஸ்.ரி.ஆனந்தன் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-2)

யாழ்.செய்திகள்

## அடிப்படை வசதிகளின்றி இயங்கும் பாடசாலைகள்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகள் மீள இயங்கத் தொடங்கி உள்ள போதிலும் தற்போது இப் பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றன.

குறிப்பாக, சிறிய தறப்பாள்களின் கீழும் கொட்டகைகளின் கீழுமே இப் பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

இதேவேளை மாணவர்கள் தளபாட வசதிகள் இன்மையால் நிலத்தின் கீழ் இருந்து கல்வி கற்று வருகின்றனர்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகள் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட இம்மாணவர்கள் யுத்தம் இல்லாத சூழ்நிலையிலும் நிம்மதியற்ற நிலையில் கல்வி கற்று வருகின்றனர்.

எனவே இம்மாணவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என இப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் பலவும் கோரிக்கை விடுத்துள்ளன. (ஸ்ரீ-43)

## மகப்பேற்று மருத்துவர் இன்மையால் பாதிக்கப்படும் கர்ப்பிணிப் பெண்கள்

### அம்புலன்ஸில் பிரசவித்த பரிதாபம்!

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இன்மையாலும் குடும்பநல மருத்துவ மாது இன்மையாலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,கடந்த புதன்கிழமை பிரசவ வலியால் துடித்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு வைத்தியர் இன்மையால் அம்புலன்ஸ் வண்டி ஊடாக மந்திகை மருத்துமனைக்கு அனுப்பப்பட்டார்.

எனினும் கொடிகாமத்திற்கு அண்மையாக அம்புலன்ஸ் வண்டி சென்று கொண்டிருந்த போது வாகனத்தினுள் பிரசவம் இடம் பெற்றது.

இதனைத்தொடர்ந்து கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் தாயும் சேயும் அனுமதிக்கப்பட்டனர்.

எனவே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் இன்னும் இப்பகுதிக்கு நிரந்தர வைத்தியர் இன்மையாலும் இந்தப் பகுதி குடும்பநல மருத்துவமாது இன்மையாலும் இந்தப் பகுதி மக்களும் கர்ப்பிணித் தாய்மாரும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

உரிய தரப்பினர் இதற்கான நடவடிக்கையை மேற் கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-64)




சுன்னாகம் கிழக்கு சிவன் முன்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் ஆசிரியர்கள் அழைத்துவரப்படுவதையும் கௌரவிக்கப்பட்ட . ஆசிரியர்களுடன் தலைவர் சிவநடராசா, ஸ்ரீகாந்தக்குருக்கள், சிறப்பு விருந்தினர்களான கல்வி ஆலோசகர் வாலாம்பிகை, சனசமூக அபிவிருத்தி அலுவலர் ஞானவேல்ராசா ஆகியோரைப் படங்களில் காணலாம்.

# இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியக கிளை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிப்பு

## வெளிநாடுகளிலும் உயர்கல்வியை தொடர வாய்ப்பு

இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கற்கைகளை வழங்குவதில் முன்னணியில் திகழும் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம்,தனது புதிய கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளது. யாழ்.பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதி சிறந்த தகவல் தொழில்நுட்ப கல்வி வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த விஸ்தரிப்பு இடம் பெற்றுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மஹிந்த சிந்தனை அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப துறையும் அபிவிருத்தி கண்டு வருகிறது. இதன் ஒரு அங்கமாக உலகளாவிய ரீதியில் இலங்கையின் கல்வி தரத்தை மேம்படுத் தக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. இது போன்ற விஸ்தரிப்பு திட்டங்களுக்கு அடித்தளமிட்டதன் மூலம் தகவல் தொழில்நுட்ப துறையில் கடந்த சில ஆண்டுகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தின் தலைவர் பேராசிரியர் கருணாரத்ன கருத்து தெரிவிக்கையில், எமது கல்வியகத்தில் பட்டக் கற்கைகளை தொடரும் மாணவர்கள், தமது முதல் வருட நிறைவின் பின்னர் அல்லது இரண்டாம் வருடத்தை பூர்த்தி செய்த பின்னர் வெளிநாடுகளிலுள்ள எமது உறுப்பு பல்கலைக் கழகங்களில் உயர் கல்வியை தொடர்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. அங்கு தமது உயர் கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் வேலை அனுமதிக்கான (Work Permit) 2 வருட விசாவுக்கான தகுதியை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட் டுள்ள கிளை நகரின் மத்தியில் கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளது. இங்கு கற்கைகளை முன்னெடுப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த பேராசிரியர்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். அத்துடன் மாணவர்களுக்கு தமது உயர்கல்வியை பூர்த்தி செய்வதற்கு இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தின் வெளிநாட்டுக் கிளை அல்லது ஏனைய முன்னணி பல்கலைக் கழகங்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மத்தியில் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர் கல்வியை தொடர்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது மிகவும் முக்கியமானது, எமது கல்வியகத்தினால் முன்னெடுக்கப்படும் கற்கைநெறிகள் சர்வதேச தரங்களுக்கு அமைவானவை என்று பேராசிரியர் லலித் கமகே தெரிவித்தார்.

பிரித்தானியாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஷெவ்ஃபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தில் அதிகளவான பட்டக்கீழ்படிப்பு பிரிவில் சித்தியெய்திய இலங்கை மாணவர்களுக்கு தமது மேற்படிப்பை தொடர்வதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம் வழங்கியுள்ளது. லண்டன் நகருக்கு புறநகரான ஷெவ்ஃபீல்ட் நகரில் அமைந்துள்ள இந்த பல்கலைக்கழகம், அதிகளவான இலங்கை மாணவர்களை கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உயர் கல்விகளுக்கான தரவுகள் முகவர் (HESA) நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது, 2008 ஆம் ஆண்டில் 99 இலங்கை மாணவர்களையும்,2009ஆம் ஆண்டில் 96 இலங்கை மாணவர்களுக்கும் மேற்படிப்பிற்கான பட்டங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ்வாண்டில் 121 இலங்கை மாணவர்களுக்கு இப் பல்கலைக்கழகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஷெவ்ஃபீல்ட் பல்கலைக்கழகத்தின் கலை,கணினி, பொறியியல் மற்றும் விஞ்ஞான பீடத்தின் கல்விவள பிரிவின் உதவி பீடாதிபதி, பேராசிரியர் டெரன்ஸ் பெரேரா கருத்து தெரிவிக்கையில்,

ஷெவ்ஃபீல்ட் வாழ்க்கைச்செலவு குறைந்த நகரமாகும். எமது கற்கை நெறிகள், தொழில் வாய்ப்புகளை நாடும் மாணவர்களுக்கு சிறந்த தெரிவாக அமையும். பெரும்பாலான எமது பட்டதாரிகள் தமது கற்கைகளை பூர்த்தி செய்து, உடனடி தொழில் வாய்ப்புகளை பெற்றிருந்தனர் என்றார்.

இலங்கை மாணவர்களுக்கு சர்வதேச நாடுகளில் தரம்மிக்க பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியைத் தொடர இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகம் செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யாழ். மாணவர்களின் நலன் கருதி செப்டெம்பர் மாதம் நிறைவடையவிருந்த மாணவர்களுக்கான அனுமதி யாழ்.கிளையில் நவம்பர் மாத இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்தின் யாழ்ப்பாணக் கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். முகவரி : 154ஏ, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி :0217200406/7


Sri Lanka
Institute of Information Technology



SLIIT பட்டம் / டிப்ளோமா வேலைத்திட்டம்

- தகவல் தொழில்நுட்பத்தில் விசேட துறையில்
  - தகவல் தொழில்நுட்பம்
  - தகவல் முறைமைகள்
  - கணணி முறைமைகளும் வலையமைப்புக்களுக்கான

  B.Sc விசேட (கௌரவ) பட்டம்
- தகவல் தொழில்நுட்பத் துறையில் B.Sc
- தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர்தர டிப்ளோமா
- தகவல் தொழில்நுட்பத் துறையில் டிப்ளோமா
- இலத்திரனியல் பொறியியலில் B.Eng (கௌரவ) பட்டம் (ஷெபீல்ட் ஹல்லாம் பல்கலைக்கழகம்), ஐக்கிய இராச்சியம்
- கணணி முறைமைகளிலும் வலையமைப்புக்களிலும் B.Sc பட்டம் (கேட்டின் பல்கலைக்கழகம்), அவுஸ்ரேலியா
- வியாபார முகாமைத்துவத்தில் BBA (கௌரவ) பட்டம் (ஷெபீல்ட் ஹல்லாம் பல்கலைக்கழகம்), ஐக்கிய இராச்சியம்

தகுதிகாண் பரீட்சை

திகதியும் நேரமும் :
31 ஒக்டோபர் 2010
மு.ப 10.00

இடம் :
இந்து கல்லூரி, யாழ்ப்பாணம்

மொழிகள :
ஆங்கிலம், சிங்களம், தமிழ்

சகல விண்ணப்பதாரிகளும் தகுதிகாண் பரீட்சை கட்டணமாக 600 ரூபாவை, இலங்கை வங்கி எந்த கிளையிலும் SRI LANKA INSTITUTE OF INFORMATION TECHNOLOGY என்ற பெயரிலுள்ள நடைமுறை வங்கி கணக்கு 1630552 இலக்கத்திற்கு பணத்தை செலுத்தவேண்டும். அத்தோடு முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தையும், பணம் செலுத்திய வைப்புச்சீட்டையும் இந்து கல்லூரியில் அமைந்துள்ள, யாழ் மத்திய பரீட்சை நிலையத்தின் தொடர்பாளருக்கு 2010 ஒக்டோபர் 31ம் திகதியன்று கையளிக்கவும்.

**PRELIMINARY APPLICATION FORM**
For the B.Sc. (Hons) Degree Programmes - 2010/2011

1. Name with Initials (as is usually written) ..............................
2. Date of Birth :Day .......... Month .......... Year ..........
3. Present Mailing Address :..............................
4. Contact telephone No. (if any):..............................
6. The medium in which you wish to sit the Aptitude Test[1]:
   Sinhala ☐ English ☐ Tamil ☐

Bank receipt for Rs.600/- paid[2] at the Bank of Ceylon at .................... branch is attached to this application.

I certify that the information given above are true and accurate.

Date : ....................    .................... Signature

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் 021-7200406 அல்லது 021-7200407 உடன் தொடர்பு கொள்ளவும்.

www.sliit.lk

SRI LANKA INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
BoC Merchant Tower
# 28, St. Michael's Road, Colombo 3. Tel: 2301904

# நாடெங்கிலும் ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் அமைக்க இந்தியா உதவி

(கொழும்பு)

நாடெங்கிலும் ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது.

மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டது போன்று நாட்டின் ஏனைய பகுதிகளி லும் ஆங்கில ஆசிரியர் பயிற்சி நிலையங் களை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரதி இந்திய உயர்ஸ் தானிகர் ஆர்.கே.மிஸ்ரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சப்பிரகமுவா மாகாண அதிபர்கள் கலந்து கொண்ட செயலமர்வொன்று அண்மையில் துல்ஹிரியாவில் நடைபெற்றபோது அதில் உரையாற்றிய போதே அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத் தின் கீழ் இது வரை மத்திய மாகாணத்தில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங் கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதற்குப் புறம்பாக மத்திய மற்றும் சப்ர கமுவ மாகாணங்களில் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த பல செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளது

**வர்த்தக நுகர்வோர் அமைச்சு தெரிவிப்பு**

அரிசிக்கு விலைக் கட்டுப்பாடு இல்லை என வும் கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ள தென வும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தலும் நேற்று முன்தினம் உத் தியோகபூர்வமாக நீக்கப்பட்டதாக அமைச் சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

போதியளவு அரிசிமற்றும்நெல்கையிருப்பில் உள்ளதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வருடம் செப்டெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டதுடன் தற் போது அரிசி விலை குறைந்து அரிசியில் நாடு தன்னிறைவு கண்டுள்ளதையடுத்து கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இரண்டாயிரம் நவரத்தினக் கற்களை வயிற்றுக்குள் வைத்து கடத்திய இலங்கையர்

## சென்னை விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

இரண்டாயிரம் நவரத்தினக் கற்களை வயிற்றுக்குள் விழுங்கிக்கொண்டு கொழும் பில் இருந்து விமானம் மூலம் இந்தியாவின் சென்னை மாநகரத்தை வந்தடைந்த இலங் கையர் ஒருவர் சென்னை விமான நிலையத் தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து புறப்பட்டு வந்தி ருந்த பயணிகளை விமான நிலையத்தில் வைத் துப் பொலிஸார் சோதனை செய்தனர்.

இதன் போது முஹமது சபீக் என்பவர் மீது அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து இவரை சோதனை செய்தபோது சந்தேகம் வலு ஆனது.

வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஸ்கான் செய்து பார்த்த போது வயிற்றுக்குள் நவரத்தினக் கற்கள் இருப்பது தெரிந்தது. மருத் துவ முறையில் அவை வெளியில் எடுக்கப் பட்டன.

சுமார் இரண்டாயிரம் நவரத்தினக் கற்கள் வரை இருக்கும் ஒவ்வொன்றும் இந்திய பெறு மதியில் ஒன்றரை கோடி ரூபாய் இவர் கூலிக் காக இக் கற்களை கடத்தி வந்திருக்கின்றார் என்பதும் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவுக்குழு முன் சாட்சியம்

(கொழும்பு)

நட்டத்தில் இயங்கும் அல்லது இலாப மீட்டத் தவறிய அரச நிறுவனங்களின் தலை வர்கள் கோப் குழுவின் (பொது நிறுவனங் கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுகுழு) முன் விசாரணைக்கு அழைக்கப்படவுள் ளனர் என மேற்படி குழுவின் தலைவரும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

வர்த்தக ரீதியில் அமைக்கப்பட்ட சில நிறு வனங்கள் நட்டத்தில் இயங்கியதன் காரண மாக அவற்றின் நட்டத்தை திறைசேரி நிறைவு செய்துள்ளது.

திறைசேரி என்பது பொதுச் சொத்து எனவே பொதுச் சொத்துக்களை விரயம் செய்வது பொது மக்களுக்கு இழைக்கும் தீங்காகும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

எனவே அவ்வாறான நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது முன்னாள் தலைவர் கள் தெரிவுக்குழு முன் சாட்சியம் அளிக்க வேண்டிவரும் என அவர் மேலும் தெரிவித் தார். (ஸ்ரீ)

# நாட்டில் தினமும் 250 க்கு மேற்பட்டோர் பக்கவாத நோயினால் உயிரிழப்பு

## டாக்டர் மஹிபால தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தினமும் 250க்கு மேற்பட் டோர் பக்கவாதம் காரண மாக உயி ரிழப்பதா கவும் தினமும் 55 பேர் இதனால் பீடிக்கப் படுவதாகவும் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித்த மஹிபால தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி உலக பக்கவாத தின மாகும். இதனை முன்னிட்டு நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மஹிபால இக்கருத்தை தெரிவித்தார்.

மேலும் மூளைக்கான இரத்த விநியோகத்தில் தடை ஏற்படுவதன் காரணமாகவே பக்கவாதம் ஏற்படுவதாக வும் இதன் காரணமாக மூளையின் பாதிக்கப்பட்ட பகுதி செயற்படமுடியாமல் போவதுடன் உடம்பின் எலும் புகளையும் செயலிழக்கச் செய்யும் எனவும் புரிந்து கொள்ள, பேச, பார்க்க முடி யாமல் போதல் ஆகியவை யும் ஏற்படும் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் அதிக மரணத் தினை ஏற்படுத்தும் முன்னணி காரணி யாக பக்கவாதம் உள் ளதாகவும் மாரடைப்பே அதிக மரணங்களை ஏற்படுத்தும் நோயாக தற்போது விளங்கு வதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுக ளுக்கமைய உலகில் 69 நிமிடங்களுக் கொரு வர் பக்கவாத நோயில் இறப்பதாகவும் வரு டாந்தம் இத்தொகை 5.7 மில்லியனாக உள் ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டு 3 மணித்தியாலங்களுக்குள் கொழும்பு தேசி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டால் அவர்களது உயிரைக் காப்பாற்ற முடியுமென வும் இதற்கென கொழும்பு வைத்தியசாலை யில் சிறப்புப் பிரிவு உள்ளதாகவும் நரம்பியல் டாக்டர் பத்மா குணரத்ன தெரிவித்துள் ளார்.

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய உணவுகளைத் தவிர்த்தல், புகைத்தலை தவிர்த்தல், நீரிழிவைக் கட்டுப்படுத்தல், உடல் நிறையைக் கட்டுப்படுத்தல், மன அழுத்தத் தைக் கட்டுப்படுத்தல் மற்றும் தினசரி உடற் பயிற்சி ஆகியவை மூலம் இதனைத் தடுக்க முடியும் எனவும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## வேலைக்கான கேள்வி அறிவித்தல் -2010

**கீழ்க் குறிப்பிட்ட வேலைகளுக்கு யாழ்ப்பாண மாநகரசபையில் 2010 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள, வற் வரி செலுத்தும் மிகத்தகைமையுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசி திகதி: 04.11.2010 ஆம் திகதி பி.ப 3.00மணி வரை
2. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி : 18.11.2010 ஆம் திகதி நண்பகல் 12.00மணி வரை
3. கேள்விகள் யாவும் 18.11.2010 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயருடன் வேலைக்கான கேள்வி என எழுதி "மாநகர ஆணையாளர்" யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ நேரடியாக சமர்ப்பிக்க பட வேண்டும்.
5. மேலதிக விபரங்களை யாழ். மாநகரசபையின் வேலைப்பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த ICTAD பதிவுத்தரம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப் பணம் (வற்வரி உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | மணிக்கூட்டு வீதி சந்தி பெட்டி மதகு நிர்மாணம் (அசோகா ஹோட்டல் அருகில்) | C7 | 10000.00 | 1150.00 |
| 02 | செங்குந்தா சந்தைக்கட்டடப் பகுதியில் தேங்காய் விற்கும் நிலையம் புனர்நிர்மாணம் | C8 | 5000.00 | 575.00 |
| 03 | செங்குந்தா சந்தைக்கட்டடப்பகுதியில் மீன் விற்கும் நிலையம் புனர்நிர்மாணம் | C7 | 10000.00 | 1150.00 |
| 04 | செங்குந்தா சந்தை உள்வீதி திருத்தம் | C9 | 1500.00 | 575.00 |

**குறிப்பு : வேலைகள் யாவற்றையும் 21.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

(சி-1477)

மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருஞானசேகரன் அலைமகள் 2010ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார். இவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.


அவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபருக்கும் வகுப்பாசிரியருக்கும் மற்றும் சகல ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


வாழ்த்துவோர்:-

மதுனா பாதணி,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

மதுனா பாதணி ஐயா,
அப்பம்மா.

(சி-1480)





மொனறாகலை மாவட்டத்தில் உள்ள சியாம்பட்டுவ கல்விக் கோட்ட ஆசிரியர்களைக் கொண்ட குழுவினர் சியாம்பட்டுவ கல்விக்கோட்டப் பணிப்பாளர் கே.எம்.குணவர்த்தன கல்வி பரிமாற்றச் சுற்றுலாவை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தனர். இக் கல்வி பரிமாற்ற விடயம் தொடர்பாக இவர்கள் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலைக்குச் சென்று அதிபருடன் கலந்துரையாடுவதையும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைப் பார்வையிடுவதையும் அதிபருக்கு நினைவுப் பரிசில் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வர்த்தக நிலையங்களிலும் சந்திகளில் நிற்பவர்களிடமும் பல்வேறு விடயங்கள் குறித்து கேட்டறிந்தோம்

## நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் வெளிமாவட்டங்களில் அமர்வுகளை நடத்தச் சென்ற சமயங்களில் வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்திகள் எனப் பல இடங்களில் மக்களை சந்தித்துப் பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியதாக ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் சட்டமா அதிபருமானசி.ஆர்.டிசில்வாதெரிவித்தார்.

கற்றறிந்த பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வு கடந்த 25ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நடைபெற்றபோதே ஆணைக்குழுவின் தலைவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஆணைக்குழு முன்னிலையில் அன்றைய தினம் புளொட் அமைப்பின் தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன் சாட்சியமளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முக்கியமான ஒன்றாகும் என்றும் விசேடமாக இந்த ஆணைக்குழு கிராமங்களுக்கு சென்று விடயங்களை ஆராய்ந்து பார்க்கின்றமை முக்கியமானதாகும் என்றும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

அதன்போது இடையில் கருத்து வெளியிட்ட ஆணைக்குழுவின் தலைவர் நாங்கள் வெளிமாவட்டங்களில் அமர்வுகளை நடத்துவதற்காக செல்லும் போது திடீரென வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்திகள் போன்ற இடங்களில் நின்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவோம். பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை கோருவோம்.

இந்த விடயம் உங்களுக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. ஆனால் நாங்கள் அவ்வாறானதொரு முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றோம் என்றார். (ஸ்ரீ-2)

# சிறுவர், முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா எதிர்வரும் 31 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில், யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினர்களாக கடவுளின் குழந்தைகள் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் பி.ஆனந்தகுமார் மற்றும் தலைவர் திருமதி நவநீதம் ஜெயதீசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# இலஞ்ச ஊழல் மோசடிகளில் இலங்கைக்கு 91 ஆவது இடம்

இலஞ்ச ஊழல் மோசடிகளில் ருவாண்டாவை விட மிக மோசமான நிலையில் இலங்கை உள்ளது என்று ஊழலுக்கு எதிராக போராடும் சர்வதேச சிவில் அமைப்பான ட்ரான்ஸ் இன்டர்நஷனல் நேற்று வெளியிட்ட இவ் ஆண்டுக்கான புள்ளி விபரம் மூலம் தெரியவந்துள்ளது.

இந் நிறுவனம் இலஞ்ச ஊழல் மோசடிகள் நாடுகள் தோறும் எப்படி இருக்கின்றன? என்று ஆராய்ந்து வருடா வருடம் புள்ளி விபரங்களை வெளியிடுவது வழக்கம். இவ்வாண்டிற்கான புள்ளிவிபரத்தை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது. இப் புள்ளிவிபரத்தில் 178 நாடுகளில் நிலவும் இலஞ்ச ஊழல் மோசடி நிலைமைக்ள் தரப்பட்டுள்ளன.

இலஞ்ச ஊழல்கள் குறைவாக இருக்கின்ற ஒழுங்கில் நாடுகள் பட்டியல் இடப்பட்டுள்ளன.இலங்கை 91 ஆம் இடத்தில் உள்ளது. ருவாண்டா 66 ஆம் இடத்திலும் கானா 62 ஆம் இடத்திலும் நமிபியா 56 இடத்திலும் பொஸ்பானா 33ஆவது இடத்திலும் இருக்கின்றன.

இவை இலங்கையை விட இலஞ்ச ஊழல் மோசடிகள் குறைந்த நாடுகளாக காட்டப்பட்டுள்ளன. ஆயினும் கடந்த வருடம் இலங்கை 97 ஆம் இடத்தில் இருந்திருக்கின்றது. இம்முறை இலஞ்ச ஊழல் மோசடிகள் மயிரிழையில் இலங்கையில் இது குறைந்திருக்கின்றதை காட்டுகின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# வேலைவாய்ப்பு கோரி நிதியமைச்சை நோக்கி ஊர்வலம் சென்றோர் தடுப்பு

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்களை வழங்குமாறு கோரி, நிதியமைச்சை நோக்கி நேற்று முன்தினம் ஊர்வலமாகச் சென்ற இளைஞர், யுவதிகளை அங்கு செல்லவிடாது பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி தடுத்தனர்.

சோசலிச இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இணைத்துக்கொண்ட தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் பட்டதாரி இளைஞர், யுவதிகள் மருதானை டெக்னிக்கல் சந்தியில் இருந்து ஊர்வலத்தை ஆரம்பித்ததுடன் கொழும்புக் கோட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள், கோஷங்களை எழுப்பியதுடன், எதிர்ப்பு தெரிவிக்கும் சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.


இந்த ஊர்வலம் காரணமாக புறக்கோட்டை பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நிதியமைச்சு செல்வதைத் தடுப்பதற்காக ரீகல் சுற்றுவட்ட பகுதியில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், நிதியமைச்சு செல்லும் வீதியின் குறுக்கில் தடையேற்படுத்தியிருந்தனர்.

இதனைத்தவிர, கலகத் தடுப்பு பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் உள்ளிட்டவற்றைத் தயாராக வைத்திருந்தனர். இந்த நிலையில், ரீகல் சுற்றுவட்ட பகுதிக்குச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் நிதியமைச்சு செல்ல முயற்சித்த போது, அங்கிருந்த பொலிஸார் உயர் அதிகாரிகள் சோசலிச இளைஞர் சங்கத்தின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனையடுத்து, நிதியமைச்சு செல்லும் தமது முயற்சியை கைவிட்டு, அந்த இடத்திலேயே கூட்டமொன்றை நடத்திவிட்டு, கலைந்து சென்றனர்.(ஸ்ரீ-2)

# பெருந்தோட்ட தமிழ் சமூகத்திற்கு தனியான பல்கலைக்கழகம் அவசியம்

## பிரபாகணேசன் எம்.பி.வலியுறுத்து



(கொழும்பு)

பெருந்தோட்ட தமிழ் சமூகத்திற்காக தனியான பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டுமென கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவருமான பிரபா கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கான சர்வதேச அமைப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா, பேராசிரியர் எம்.சின்னத்தம்பி மற்றும் பேராசிரியர் சந்திரசேகரம் போன்ற கல்வியியலாளர்கள்,பொருளியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் மலையகப் பெருந்தோட்ட சமூகத்திலிருந்து உருவானவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையகப்பெருந்தோட்ட தமிழ் சமூகம் அபிவிருத்தி அடைந்துள்ளதாகவும் அந்த வளர்ச்சிக்கு ஏற்ற பின்புலம் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான ஓர் அருங்காட்சியகமொன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(ஸ்ரீ-2)

# இஸ்ரேல் விவசாயத் துறையில் இலங்கையருக்குத் தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

விவசாயத் துறையில் தொழில்புரிவதற்காக முதன் முறையாக இலங்கையர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு இஸ்ரேல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்நாட்டின் விவசாயத்துறையில் இது வரை 300 பேர் வரையிலான இலங்கையர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் எயார் சீஃப் மார்ஷல் டொனால்ட் பெரேரா குறிப்பிட்டார்.

இவர்களில் 100 பேர் நேற்று இஸ்ரேலுக்கு சென்றுள்ளதாக டொனால்ட் பெரேரா கூறினார்.

இந்த இலங்கையர்கள் 6 மாத காலத்திற்கு விவசாயத்துடன் தொடர்புடைய பல்வேறுபட்ட துறைகளில் அந்த நாட்டில் பணியாற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 14 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

வாழப் பிறந்தவர்கள் என்று சிலரைப் பற்றிக் கூறக் கேட்டிருப்போம். அது 14ஆம் திகதியில் பிறந்தவர்களுக்கே மிகச் சரியாகப் பொருந்தும். அந்த அளவுக்கு வாழ்க்கையில் மிக அதிகமாக நன்மைகளைப் பெற்றவர்கள் இந்த திகதியில் பிறந்தவர்கள்! 1ஆம் எண்ணும் அதன் நட்பு எண்ணான 4ஆம் எண்ணும் சேர்ந்து 5ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்த அதிர்ஷ்டசாலிகள் இவர்கள் என்பதை மறுக்க முடியுமா? நன்மைகள் இவர்களைத்தான் தேடி வரும் என்றால் மிகையாகாது .ஆனால் எவ்வளவு கிடைத்தாலும் போதும் என்ற எண்ணம் இவர்களுக்கு வராது இவர்களின் தொழில் அதிபதி எண்கள் 5,9 தொழில் உதவி எண்களும் 5,9 தான்!

இவர்கள் பெரும்பாலும் கண்காணிக்கும் பணி அல்லது பிறரைப் பற்றி ஆராயும் அல்லது குற்றம் கண்டுபிடிக்கும் பணிகளில் அதிகம் இருப்பார்க்ள. எதையும் நன்கு அறிந்து திட்டமிட்டுச் செயற்படுபவர்கள். தொழில் அதிபதி எண் ஆதிக்கம் மட்டும் இருந்தாலே போதும். இவர்கள் மிக உயர்ந்த நிலைக்குச் சென்று விடுவார்கள்.

இதற்குக் காரணம் தொழில் எண் மற்றும் உதவி எண் இரண் டும் ஒன்றாக அமையப் பெற்றதே ஆகும். இவர் களின் வளர்ச்சி தொடர்ந்து கொண்டே இருக் கும் சிலருக்கு தொடர்ச்சியாக 14 ஆண்டுக ளும் சிலருக்கு 23 ஆண்டுகளும் முன்னேற்ற நிலை இருப்பதைக் காணலாம். சுய நலம் மிகுதியாகி மனம் போன போக்கில் செல்லும் போது, இவர்களுக்கு நன்மைகளும் உதவிகளும் செய்த எண்களின் ஆதிக்கமே இவர்களின் சரிவுக்கும் காரணமாகி விடும். இவர்கள் புதன்கிழமைதோறும் விஷ்வக் சேனரையும், இலட்சுமி ஹயக்ரீவரையும் வணங்கி வந்தால் விரைவில் நன்மைகளைப் பெறலாம்.

தொழிலதிபர் என்னும் வார்த்தையே இவர்களால்தான் உருவானதோ என்று எண்ணும் அளவிற்குப் பொருளாதார நிலையில் ஏற்றம் காணும் இவர்கள், எதையும் தீர்மானத்தோடு செயற்படுத்தக்கூடியவர்கள் தொழில் அதிபதி எண்கள் 5,9 மற்றும் பிறந்த திகதி எண்கள் 1,4 இன் ஆதிக்கம் பெற்றவர்கள் என்றும் சரிவு. இல்லாத வாழ்க்கை வசதிகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். ஒரு சிலர் வழக்கு சம்பந்தப்பட்ட இனங்களால் மட்டுமே சற்று மன வேதனை அடையக் கூடும். சிலர் மற்றவர்கள் மீது வழக்கு தொடர்ந்து சங்கடங்களைக் கொடுக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

தொழில் துறையில் தானாகவே அனைத்தும் நன்மையாக நடைபெறுவதால் எதையும் சாதாரணமாக நினைக்கும் எண்ணமே மேலோங்கி இருக்கும். முன்னோர்களின் ஆசியும் முன்னோர்களின் சொத்தும் கிடைக்கப் பெற்றவர்களாக இருப்பார்கள். மனதில் அல்லது வெளியுலகப் பழக்கங்களில் தீயவர்களின் சேர்க்கை எற்படும் போது தானே குழியில் விழும் நிலை ஏற்படும். கவனமாக இருந்தால் அனைத்தும் நன்மையாக இருக்கும். தீய பழக்கங்களும் தொழில் பின்னடைவும் ஏற்பட்டு, வாழ்க்கையையே இழக்கும் நிலை ஏற்பட்டு விடும். இவர்கள் புதன்கிழமைதோறும் தாய் இல்லாத அல்லது தாயை இழந்த பிள்ளைகளுக்கு உதவிகள் செய்து வந்தால் நன்மைகள் அதிகம் பெறல்ாம்.

இவர்களின் செயல்களுக்குத் தங்கள் எண்ண ஓட்டமே காரணமாக இருப்பதைக் காணலாம். மனதில் ஒன்று வெளியில் ஒன்று என்ற நிலை இவர்களிடம் அதிகம் இருக்கும். தொழில் அதிபதி எண்கள் 5,9 இன் ஆதிக்க் குறைபாடே இதற்குக் காரணமா கும். பிறந்த திகதியிலுள்ள 1ஆம் எண்ணின் ஆதிக்கமும் குறைபாடாக இருப்பதால்தான் இவர்கள் கடைசி வரை தொழிலாளர்களாகவே இருக்கும் நிலை உண்டாகிறது. எண் ஆதிக்கம் மாற்றம் காணும்போது பிறந்த திகதியில் 4ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைந்து 1ஆம் எண்ணின் ஆதிக்கம் அதி கரிக்கும் போது இவர்களின் நிலை உயர்வு காணும். பெரும்பாலும் இவர்களுக்கு 41 வயதுக்கு மேல் தான் தொழில் வளர்ச்சி பெற்று முன்னேறும் நிலை உண்டாகும். தொழில் எண் 5 அல்லது 9இதில் ஏதேனும் ஒரு எண் ணின் ஆதிக்கம் இருந்தாலும் இவர்களின் தொழில் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும். அடிக்கடி தொழில் மாற்றம் செய்து கொண்டே இருக்கும் நிலை எண் ஆதிக்கக் குறைபாடு காரணமாகத் தொடர்ந்து நடைபெறும். சரியான அதிர்ஷ்டத் திகதிகளில் புதிதாகத் தொழிலைத் தொடங்கினால் மேற் கூறிய தொழில் மாற்றத்தை சரி செய்யலாம். புதன் கிழமைதோறும் கருடாழ்வாருக்கு நெய் தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் மேலும் நன் மைகளைப் பெறலாம்.

''கலைக்காகவே பிறந்தார்களோ'' என நினைக்கும்படி, இவர்களிடம் கலைத் திறமை அதிகமாகவே காணப்படும். இந்தத் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் நுண்ணறிவும் திறமையும் படைத்தவர்களாகவே இருப்பார்கள். 23 வயதுக்குமேல் புகழும் வெற்றியும் கிடைக்கப்பபெறும். மனதில் எப்பொழுதும் கலை சம்பந்தப்பட்ட எண்ணங்களே அதிகமாக இருக்கும். பரம்பரையாகவும்,சிலர் திடீரெனவும் கலைத் துறைக்கு வந்த வர்களாக இருப்பார்கள். இவர்களின் தொழில் அதிபதி எண்களான 5,9 இன் மிக அதிகமான ஆதிக்கமும் பிறந்த எண்ணின் ஆதிக்கமும் ஒரு சேரப் பெற்று ள்ளதே இதற்குக் காரணம். புகழும் பொருளாதார நிலையும் நன்கு உயர்ந்துள்ள நிலையில் பெண் களால் பிரச்சினைகளைச் சந்திப் பவர்களும் இவர்களே. பெண்களால் முன்னேற்றம் காண்பவர்களும் இந்தத் திகதியில் பிறந்தவர்களே. தொழில் அதிபதி எண்களின் தன்மையைப் பொறுத் தே இவர்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அமையும். மனதில் திடீர் திடீரென புதுமைகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். ஏதாவது ஒன்றை மாற்றி அமைத்து வெற்றி பெறும் சூட்சும அறிவு பெற்றவர்களாத லால், அனைத்திலும் வெற்றி காணும் நிலை உண்டாகும். இவர்கள் மேலும் நன்மைகள் பெற புதன்கிழமைதோறும் கழைக்கூத்தாடிக ளுக்கு அல்லது நலிந்த கலைஞர்களுக்கு உதவிகள் செய்து வந்தால் மேன்மை உண்டாகும்.

பிறந்த திகதி14,விதி எண் 1 ஆக இருப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி14, விதி எண் 2 ஆக இருப்பவர்களுக்கு 24 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 14, விதி

**எஸ்.என்.ஹிரிஜி**

எண் 3 ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 14, விதி எண் 4 ஆக இருப்பவர்களுக்கும்; பிறந்த தேதி 14, விதி எண் 5 ஆக இருப்பவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் அதிக பட்ச யோகங்கள் கிடைக்கும். பிறந்த திகதி 14, விதி எண் 6 ஆக இருப்பவர்களுக்கு 33 வருடங்கள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி14, விதி எண் 7 ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 14, விதி எண் 8 ஆக இருப்பவர்களுக்கு 6 வருடங்களுக்குப்பின் இடைவெளிவிட்டு 6 வருடங்கள் என 4 முறை நற்பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 14, விதி எண் 9 ஆக இருப்பவர்களுக்கு 21 ஆண்டுகள் நற்பலன்கள் கிடைக்கும்.

குறிப்பு : பிறந்த திகதி எண்,விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். *(தொடரும்)*

# தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

## தெளிவுபடுத்தக் கோருகிறார் கரு ஜயசூரிய எம்.பி.

(கொழும்பு)

பாதுகாப்பு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெய்சூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் மேலும் அதிகளவு இராணுவ முகாம்களை உருவாக்குவதற்கும் கைதிகளை தடுத்து வைப்பதற்கான தடுப்பு முகாம்களை உருவாக்குவதற்கும் அரசாங்கம் முனைப்புக்காட்டி வருவதாகவும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கத் தின் தற்போதைய நிலைப்பாடு புரிய வில்லை என்றும் அரசாங்கத்தின் கொள்கைகள் தெளிவுபடுத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் நாட்டின் மொத்த செலவுகளில் 20 வீதம் பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,பாதுகாப்பு அமைச்சினால் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை தீர்ப்பதற்காக அதிகளவு பணம் ஒதுக்கீடு செய்யப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யுத்த காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இராணுவத் தளபாடங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகவே அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# வரி விதிப்பு குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

வரி விதிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வின் போதே இந்த அறிக்கை கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

வரி விதிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக டப்ளிவ். டி.லக்ஷ்மன் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிச் செயலாளர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரத் ஜயதிலக்க மற்றும் கணக்காய்வாளர் நிறுவனத்தின் வரி விதிப்பு பீடத்தில் தலைவர் ராஜன் ஆசீர்வாதன் ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் ஏனைய அங்கத்தவர்களாவர் என்று கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இராணுவத்திற்கு ஆட்களை சேர்க்கும் நடவடிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் இராணுவத்திற்கு ஆட்களை சேர்க்கும் நடவடிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஏற்பவே இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஓய்வு பெறும், பதவி விலகும் பதவி விலக்கப்படும் இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினருக்கு ஏற்படும் வெற்றிடங்கள் மட்டுமே நிரப்பப்படவுள்ளன.

இராணுவத்தின் ஆளணி வளம் 2 இலட்சத்து இருபத்தி ஐயாயிரமாக காண்ப்படுவதாகப் தெரிவிக்கப்படுகிறது.

போர் காரணமாக கடந்த நான்கு வருடங்களாக அதிகளவானோர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும் மனிதாபிமான மீட்புப் பணிகள் நிறைவடைந்துள்ள காரணத்தினால் உபரி படையினரை படையில் இணைத்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர் களின் கண்காட்சி நிகழ்வை யாழ்ப்பாண வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கைகளில் மாற்றம் தேவை

## வெளி விவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

போராட்டங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கைகளில் மாற்றம் தேவை



யென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமான வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கொள்கைகளை மீளாய்வு செய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 65ஆம் ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

போராட்டங்களுக்கு நிரந்தரத் தீர்வுத்திட்டங்களை ஏற்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் புதிய வழி முறைகளையும் கொள்கைகளையும் பின்பற்ற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியிலான மனித உரிமைகள் பேணிப்பாதுகாக் கப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்களின் வாழ்வதற்கான உரிமை மட்டும் உறுதிப்படுத்தினால் போதாது எனவும்,நல்ல முறையில் வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

25 வீதமாக காணப்பட்ட வறுமை நிலைமை கடந்த 15 ஆண்டுகளின் 11 வீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணுவாயுதக் களைவு,சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் போன்ற விடயங்கள் தொடர்பில் துரித கதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## 18ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

18ஆவது அரசியல் அமைப்பு சீர் திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரண்டு மாதங்கள் நிறைவடையும் நிலையில் எதிர்வரும் 8ஆம் திகதி அன்று நாடாளாவிய ரீதியில் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை ஐக்கிய சோசலிஷ கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

இந்த அரசாங்கம் தமது நலனை மாத்திரம் கருத்தில் கொண்டு செயற்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளார். அதேவேளை ,பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்து அவர்களை சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பாதுகாப்பு செலவுகளை குறைந்து அந்நிதியை இடம்பெயர் மக்களுக்கு பயன்படுத்த வேண்டும்

### ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

பாதுகாப்புச் செலவுகளை குறித்து அந்த நிதியை இடம்பெயர் மக்கள் நலத்திட்டங்களுக்காக பயன்படுத்த வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட வேண்டுமெனவும் அவை இடம்பெயர் மக்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக பயன்படுத்த வேண்டும் எனவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமாரகுருபரன் சுட்டிக் காட்டியுள்ளார்.


பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கப் பட்டுள்ள நிதி தொடர்பில் தமிழ் கட்சிகள் கவனம் செலுத்தி வருவதாகவும் பாதுகூப்பு செலவுகளுக்காக பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்து விட்டு இடம்பெயர் மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு வெளிநாடுகளிடம் கோருவது நடைமுறைச் சாத்தியமற்ற தெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில்மீண்டுமொரு பிரிவினைவாத யுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் இலங்கைக்கள் தனி நாடு ஒன்று அமைக்கப்படுவதை இந்தியா ஒரு போதும் விரும்பாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்க வேண்டுமெனவும் இவ் இனப் பிரச்சினை தொடர்பான கொள்கை களை அரசாங்கம் காலத்துக்கு காலம் மாற்றி வருவதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

### ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகத் நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் *மாயோன் மருகன்* என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம் ஆன்மீக சொற்பொழி வாற்றுவார். (ஸ்ரீ-35)



யர்/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக கற்பித்த ஆசிரியர் ஒருவரால் பணம் வைப்பிலிட்டு வங்கிப் புத்தகம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா மாணவி ஒருவருக்கு பரிசுப்பொருள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 0306 - மாக்செண்டியஸ் ரோமப் பேரரசன் ஆனான்.
- 0312 - முதலாம் கொன்ஸ்டண்டீன் மாக்செண்டியசைத் தோற்கடித்து ரோமப் பேரரசனானான்.
- 1492 - ஸ்பெயின் நாட்டுக் கடலோடியான கொலம்பசும்அவரது கூட்டத்தினரும் வழி தவறிச் சென்று கியூபாவில் கரை இறங்கினர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பொஸ்டனில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதை பிரித்தானியா தடுத்தது.
- 1834 - சுவான் ஆற்றுக் குடியேற்றத்தில் (தற்போதைய மேற்கு அவுஸ்திரேலியாவில்) பழங்குடிகளுக்கும் ஆங்கிலேயக் குடியேற்ற வாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பல பழங்குடியினர் கொல்லப்பட் டனர்.
- 1886 - நியூயோர்க்கில் அமெரிக்க ஜனாதிபதி குரோவர் கிளீவ்லாண்ட் விடுதலைச் சிலையைத் திறந்து வைத்தார்.
- 1918 - முதலாம் உலகப் போர்: ஆஸ்திரியா-ஹங்கேரியிடம் இருந்து செக்கொசிலவாக்கியா விடுதலை பெற்றது.
- 1918 - மேற்கு கலீசியாவில் புதிய போலந்து அரசு அமைக்கப்பட்டது.
- 1922 - முசோலினி தலைமையில் இத்தாலிய பாசிஸ்டுகள் ரோம் நகரை சென்றடைந்து இத்தாலிய அரசைக் கைப்பற்றினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி, அல்பேனியா ஊடாக கிறீஸ் நாட்டைக் கைப்பற்றியது. இந்நாள் கிறீசின் "ஓக்கி நாள்" ஆக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.
- 1941 - லித்துவேனியாவின் கௌனாஸ் என்ற இடத்தில் நாசி ஜெர்மனியர் 9ஆயிரம் யூதர்களை சுட்டுக் கொன்று அதே இடத்தில் புதைத்தனர்.
- 1942 - கனடா முதல் அலாஸ்கா வரையான அலாஸ்கா நெடுஞ்சாலை அமைக்கப் பட்டது.
- 1942 - போலந்தின் கிராக்கொவ் நகரில் இருந்து 2ஆயிரம் யூத சிறுவர்களும் 6ஆயிரம் பெரியவர்களும் நாசிகளினால் வதைமுகாமுக்கு அனுப்பப்பட் டனர்.
- 1948 - சுவிட்சர்லாந்து இயற்பியலாளர் போல் முல்லர் டிடிரியைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு பெற்றார்.
- 1962 - கியூபாவிலிருந்து சோவியத் ஏவுகணைகளை அகற்றுவதாக சோவியத் தலைவர் நிக்கிட்டா குருஷேவ் அறிவித்தார்.
- 1971 - ஐக்கிய இராச்சியம் தனது முதலாவது (2007 வரை ஒன்றே ஒன்றுமான) "புரொஸ்பெரோ" என்ற செய்மதியை விண்ணுக்கு ஏவியது.
- 1972 - முதலாவது ஏர்பஸ் A300 பறக்க விடப்பட்டது.
- 1985 - சண்டினீஸ்டாவின் டானியேல் ஓர்ட்டேகா நிக்கராகுவாவின் ஜனாதிபதியானார்.
- 1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செய லாளர் ஆனார்.
- 2001 - பாகிஸ்தானில் கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்து தீவிரவாதிகள் கண்முடித்தனமாக சுட்டதில் பெண்கள் உட்பட 16 பேர் கொல்லப் பட்டனர்.
- 2001 - கேரளாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக நாகர்கோயில் பகுதியில் இலேசான நில அதிர்வு ஏற் பட்டது.
- 2006 - 1930களில் ரஷ்யக் கம்யூனிஸ்டுகளால் உக்ரேனின் பிகீவ்னியா காட்டில் கொலை செய்யப்பட்ட 817 உக்ரேனியர்களினது இறுதிக் கிரியைகள் அவர்கள் கொலை செய்யப்பட்ட இடத்தில் இடம் பெற்றன.


### பிறப்புகள்

- 1955 - பில் கேட்ஸ், மைக்ரோசொப்ட் நிறுவனர், கணிப்பொறி மென் பொருள் வல்லுனர்
- 1956 - மஹ்மூத் அஹ்மதிநெஜாத், ஈரான் ஜனாதிபதி.

### இறப்புகள்

- 1627 - ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னன் (பி.1569)
- 1704 - ஜான் லாக், ஆங்கிலேய தத்துவ வியலாளர் (பி. 1632)
- 1900 - மாக்ஸ் முல்லர், ஜெர்மனிய மொழியியலாளர் (பி. 1823)

**2006 - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 8 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் ஜெனீவாவில் மீண்டும் ஆரம்பமாகின.**





யா/வயாவிளான் மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அங்கு நடைபெறும் வேலைத்திட்டங்களை பார்வையிடுவதையும் மாணவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிவதையும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

## நிர்வாக சபைத் தெரிவு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளையின் இளைஞர் வட்ட உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக ம.ஞானாகரன், உப தலைவராக ம.நதீஸ்வரன், செயலாளராக சி.அமுதினி, பொருளாளராக சா. சரிதா ஆகியோரும் 06 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-134)

## அடுத்த ஆண்டு முதல்

# பல்கலைக்கழக பாடநெறிகள் அனைத்தையும் ஆங்கில மொழியில் போதிக்க தீர்மானம்

## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதல் சகல பல்கலைக் கழங்களிலும் பாட நெறிகள் அனைத்தையும் ஆங்கில மொழியில் போதிக்க எண்ணியுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த வருடம் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக் கணனியை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் இது குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதனைத்தவிர 10 ஆயிரம் மடிக் கணனிகளை வழங்க இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். பல்கலைக் கழக பாடநெறிகள், பரீட்சை முறைகளில் மாற்றங்களை செய்து தற்போதைய காலத்திற்கு ஏற்ற மாணவர்களை உருவாக்க வேண்டும் எனவும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் தேர்தல்களில் வேறு எவரையும் போட்டியிட ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்பு இடமளிப்பதில்லை. எவராவது போட்டியிட முன் வந்தால் அவர்களின் கைகால்களை உடைத்து தமது பலவந்த போக்கை அவர்கள் உறுதிப் படுத்திக்கொள்கின்றனர்.

எதிர்காலத்தில் ஒரு மாணவர் சங்கம் போட்டியிட்டாலும் தேர்தல் நடத்தப்படும். 50 வீதத்திற்கு குறைவான வாக்குகளை பெற்றால் மாணவர் சங்கங்களை அமைக்க இடமளிக்கப்படமாட்டாது எனவும் உயர்கல்வி அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

மேலும் ஜே.வி.பி தன்னை சிறைக்கு சென்றவன் என குற்றம்சுமத்தி தன்னை குற்றவாளி எனக்கூறுவதாகவும் எனினும் தான் குண்டுத்தாக்குதல் நடத்தியோ, கொள்ளையிட்டோ, பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியோ சிறைக்கு செல்ல வில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யினர் செய்த கீழ்த்தரமான செயல்களை தான் செய்யவில்லை என்றும் தற்போது ஜே.வி.பி.யின் பச்சிளம் குழந்தைகளை போல் பேசுவதாகவும் அவர்கள் செய்தவற்றை மக்கள் மறந்து விடமாட்டார்கள் எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி.யினரின் எண்ணம் இம்முறை நிறைவேறப் போவதில்லை. அப்பாவி மாணவர்களை பலிகொடுக்க இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# புலிகள் அமைப்பில் பணியாற்றிய அச்சுதனை கைது செய்ய சர்வதேச பொலிசார் பிடியாணை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் விமானங்களுக்கு பொறுப்பாக பணியாற்றி வந்த அச்சுதன் என்ற பிருந்தவன் சிவராசாவை கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளனர் என சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் கடவுச்சீட்டை கொண்டுள்ள அச்சுதன் பிரான்சில் விமானப் பயிற்சிகளை பெற்றுள்ளதாக சர்வதேச பொலிஸார் கண்டறிந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

58ஆவது படைப்பிரிவினர் விஸ்வமடு பிரதேசத்தில் கைப்பற்றிய ஆவணங்களில் மூலம் அச்சுதன் தொடர்பான தகவல்கள் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடுதலைப்புலிகளுக்கான விமானங்கள் பங்களாதேஷ் நிறுவனம் ஒன்றின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டு அங்கிருந்து இந்தோனேசியாவுக்கு அனுப்பி பின்னர் முல்லைத்தீவு கொண்டுசெல்லப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ)


யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை



ஜயரத்தினம் நினைவு தினமும்
கனிட்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்
சின்னப்பா சிலை திறப்பு விழாவும்

இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம்: 29.10.2010 வெள்ளிக்கிழமை மு.ப 8.30

தலைவர்
திருமதி.சிவமலர் அனந்தசயனன்
அதிபர் .யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

பிரதம விருந்தினர்
பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
(மகாஜனன்)
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நினைவுப் பேருரை
வைத்திய கலாநிதி துரையப்பா இராசமுத்தையா
(மகாஜனன்)
உளவளநல வைத்திய நிபுணர், லண்டன்

சிறப்பு விருந்தினர்கள்
திரு. சற்குணானந்தம் கைலாசநாதன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,தெல்லிப்பழை
திருமதி.தேவிகாராணி புஷ்பானந்தன்

கௌரவ விருந்தினர்
திரு.ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
அதிபர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

பரிசில் வழங்கல்
திருமதி.கௌரி சண்முகலிங்கன்
ஆசிரியை, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

நன்றியுரை
திரு.வைரமுத்து சிவராசா
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(சி-1478)

பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.


# திருகோணமலையில் இஸ்லாமிய புனித நகரம் உருவாக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் இஸ்லா மிய புனித நகரம் ஒன்று உருவாக்கப்படும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித் தார்.

திருகோணமலை மாவட்டத்தில் பள்ளி வாசல்களுக்கு அண்மையில் இருக்கும் பாதுகாப்பு படையினரின் முகாம்கள் விரைவில் வேறு இடங்களுக்கு மாற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 30 வருட காலமாக வடக்கு -கிழக்கில் நில விய பயங்கரவாதத்தை ஜனாதிபதியின் சிறந்த வழி காட்டலின் மூலமாக முடிவுக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் அமைதி நிலவுகிறது. அதனால் தான் நானும் இப் பிரதேசத்திற்கு வந்து உங்களது கஷ்டங்களையும் குறைகளையும் கேட்டறிகின்றேன் என்றார்.

கிண்ணியா பெரியபள்ளி வாசலில் திரு கோணமலை மாவட்ட உலமாக்கள், பள்ளி வாசல் நிர்வாகிகள் மற்றும் ஊர் பிரமுகர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இம் மாவட்டத்திலுள்ள சகல முஸ்லிம் பிரதேசங்களையும் ஒன்றிணைத்து அதனூடாக கிண்ணியாவில் இஸ்லாமிய கலாசாரத்தினூடாக ஒரு பெரியபள்ளி வாசலை நிர்மாணித்து புனித நகரமாக உருவாக்குவதற்கு மத விவகார அமைச்சர் என்ற வகையில் சகல நடவடிக் கைககையும் எடுப் பேன்.

மேலும் முஸ்லிம் மக்கள் மூன்று தலை முறையாக எனக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பியுள்ளார்கள்.

அதே போன்று தான் முஸ்லிம் நாடுகள் எமது நாட்டுக்கு பல ஆண்டு காலமாக உதவி களை வழங்கி வருகிறது.

முஸ்லிம்களுக்கு ஒரே ஒரு அல் லாஹ். ஆனால் அவர்கள் இன்று பல கூறுகளாக பிரிந்து பிரச்சினையில் இருக்கிறார்கள்.

நாங்கள் போய் சமாதானம் புரிய வேண் டியிருக்கிறது. எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் இல்லாமல் குர்ஆனில் கூறப்பட்ட மசூரா அடிப்படையில் உங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள் என மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இந்தோனேசியாவில் சுனாமி!!!

# 110 பேர் பலி; 380 பேர் மாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் , கடலில் 10 அடி உயரத்துக்கு சுனாமி உருவானது.இதில் 110 பேர் பலியாகியதுடன் பெண்கள்,குழந்தைகள் என 380 பேர் காணாமல் போய் விட்டனர்.

இந்தோனேசியாவின் மேற்கு பகுதியில் சுமாத்ரா தீவின் அருகிலுள்ள மென்டாவாய் தீவுக்கருகில் நேற்று முன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுகோலில் 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கம்,மேற்கு சுமாத்ரா தீவிலுள்ள பல்வேறு மாகாணங்களில் உணரப்பட்டது. நிலநடுக்கத்தால் கடலில் 10 அடி உயரத்துக்கு சிறிய அளவில் சுனாமி ஏற்பட்டது.

மென்டாவாய் தீவுகளில் 20 கி.மீ தூரத்துக்கு சுனாமியால் ஏற்பட்ட அலைகள் புகுந்தன. இந்தச் சுனாமியில் சிக்கி மென்டாவாய் தீவுகளில் 150 வீடுகள் சேதமடைந்தன.

இத் தீவுகளில் தெற்கு பகாய் என்ற இடத்தில் உள்ள பெலுமொங்கா உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் , குழந்தைகள் உட்பட 380 பேர் வெள்ளத்தில் சிக்கிக் காணாமல் போய்விட்டனர்.

மலகோபா என்ற கிராமத்தில் 80 சதவீத வீடுகள் அழிந்து விட்டன. உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தீவுகளின் அருகில் படகில் சுற்றுலா மேற்கொண்டிருந்த 10 அவுஸ்திரேலியர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (ஸ்ரீ-2)

## பெனாசீர் பூட்டோவை கொன்றது தலிபான்களே

### பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு தகவல்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவை கொன்றது தலிபான்கள் தான் என்று அந்நாட்டு புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது. கடந்த 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி ராவல் பிண்டியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்டார்.இதுதொடர்பாக காலித் முகமது என்பவர் தலைமையிலான புலனாய்வு குழு விசாரணை நடத்தி வந்தது. இந்நிலையில் பெனா சீர் பூட்டோவை கொன்றது தெரிக் இ-தாலி பான் என்ற அமைப்பு தான் என்று கண்டு பிடித்துள்ளது.

மேலும் இதற்கு மூளையாக இருந்து செயல்பட்டது அந்த அமைப்பின் தலைவரான மறைந்த பைதுல்லா மெகூத் தான் என்றும் கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# எழுத்தாளர் அருந்ததிராய் மீது இராஜ துரோக குற்றச்சாட்டு

காஷ்மீர் பிரிவினைவாத குழு தலைவர் கிலானி மற்றும் எழுத்தாளர் அருந்ததி ராய் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

இவர்கள் இருவரையும் இராஜதுரோக

## கைது செய்ய பொலிஸார் தீவிரம்


குற்றத்தின் அடிப்படையில் கைது செய்ய டில்லி பொலிஸ் தீவிரமாக இருந்தாலும் மத்திய உள்துறை மற்றும் சட்ட அமைச்சகங்களின் ஒப்புதலுக்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்பு டில்லியில் காஷ்மீர் பிரச்சினை குறித்த கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த கூட்டத்தில் பிரிவினைவாத குழு தலைவரான சையது அலி ஷா கிலானியும் பிரபல எழுத்தாளரும் மனித உரிமை ஆர்வலருமான அருந்ததி ராயும் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் அருந்ததி ராய் பேசிய பேச்சு கடும் விமர்சனத்தை கிளப்பியுள்ளது. காஷ்மீர் தங்களின் பகுதி அல்ல என்பதை சர்வதேச அரங்கில் இந்தியாவே ஒப்பு கொண்டதாக அருந்ததி ராய் கூறியிருந்தார்.

இதற்கு இந்த கூட்டம் முடிந்ததுமே பா.ஜ. தலைவர் களின் ஒருவரான அருண் ஜெட்லி கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தார். அருந்ததி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தார். இது குறித்து டில்லி பொலிஸார் உரிய முறை யில் விசாரணை நடத்துவர் என்றும் உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இப்பிரச்சனை தீவிர வடிவம் எடுக்க தொடங்கியுள்ளது. அருந்ததி ராயை கைது செய்வதற்குண்



டான சட்ட ரீதியிலான அனைத்து விபரங்களையும் சேகரித்து அவரை கைது செய்யலாம் என்ற முடிவுக்கு டில்லி மாநகர பொலிஸின் சட்டப்பிரிவு வந்துள்ளது.

ஆனாலும் கைது நடவடிக்கைக்கு முன்பாக மத்திய அரசின் உத்தரவுக்காக காத்திருக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அருந்ததியின் பேச்சு ராஜதுரோக குற்றம் என்றும் அவரை குற்றவியல் சட்டம் 124 ஏ பிரிவின் கீழ் கைது செய்யவும் முகாந்திரம் இருக்கிறது என்றும் டில்லி பொலிஸ் நம்புகிறது.

ஆனாலும் மத்திய உள்துறை அமைச்சகம் இதுவரை எந்த முடிவுக்கும் வரவில்லை. காரணம் மிகவும் நுணுக்கமான இந்த பிரச்சனையில் காங்கிரஸ் தலைமை என்ன முடிவு எடுக்கிறதோ அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் என உள்துறை அமைச்சகம் கருதுகிறது.

அதை போலவே சட்ட அமைச்சகமும் இது பற்றி உள்துறை அமைச்சகத்தின் கருத்துக்களை கேட்டறிந்து விட்டு எதையும் மேற்கொண்டு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

அருந்ததி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற பரபரப்பு எழுந்திருப்பதால் பிரபல மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பை தெரிவிக்க ஆரம்பித்துள்ளன.

அமெரிக்க அதிபர் ஒபாமா விரைவில் இந்தியாவுக்கு வரவுள்ளார். காஷ்மீர் பிரச்சனைக்கு தீர்வு காண்பது அவசியம் என்ற கருத்து அவருடையதாக இருந்து வருகிறது. அவர் வரும் வேளையில் காஷ்மீர் பிரச்சனை பெரியதாக வெடிப்பதை மத்திய அரசு விரும்பவில்லை.

மேலும், காஷ்மீர் இந்து பண்டிட்டுகளுக்கு ஆதரவாக பா.ஜ.பேசி வருவதும் நெருக்கடியை தருகிறது. தவிர புக்கர் பரிசு பெற்றவர் அருந்ததி ராய். அவர் மீது நடவடிக்கை எடுத்தால் அது சர்வதேச அளவில் பேசப்படும் விடயமாகி விடும். ஆகவே அருந்ததி ராய் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவசரம் காட்டுவதா வேண்டாமா என்ற குழப்பம் அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

## அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மீது சப்பாத்து வீசியவர் கைது

அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மீது கடந்த 24 ஆம் திகதி சப்பாத்து வீச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய பிரதமர் யூலியா கில்லார்ட் இது போன்ற செயல்களுக்கு மன்னிப்பு கிடையாது என்று கூறியுள்ளார்.


அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் ஜோன் ஹவார்ட் கடந்த 24 ஆம் திகதி ஏ.பி.சி. தொலைக்காட்சி ஒன்றில் பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் ஈராக் போருக்கு அவுஸ்திரேலிய வீரர்களை அனுப்ப தான் எடுத்த முடிவு சரிதான் என்று அவர் வாதிட்டுக் கொண்டிருந்த போது பார்வையாளர்கள் வரிசையில் இருந்த ஒருவர் தன் இரண்டு சப்பாத்துக்களையும் அவர் மீது வீசினார்.

இதனை வீசிய போது ஈராக்கிற்கு வீரர்களை அனுப்பியதற்குத் தான் இது என்று கத்தினார். ஆனால் அவை ஜோன் மீது படவில்லை. அந்நிலையிலும் அவர் அமைதியாக இருந்தார். இதை மறந்து விடுங்கள் என்று கூறினார். அவரது பாதுகாப்பு வீரர்கள் சப்பாத்து வீசியவரை அங்கிருந்து அகற்றிக் கைது செய்தனர். விசாரணையில் அவரது பெயர் பீட்டர் கிரே என்று தெரிந்தது.

அவர் இது குறித்துக் கூறுகையில், நான் சப்பாத்து வீச வேண்டும் என்ற திட்டத்தில் வரவில்லை. நான் ஒரு பெண்ணைப் போல் வீசி விட்டதாக பலர் வருத்தப்பட்டனர். நான் அவரைக் குறி வைத்துத் தான் எறிந்தேன். ஆனா லும் குறிதப்பி விட்டது. என் இயல்பான குணத்துக்கு நான் இப்படி நடந்து கொண்டது நேர்மாறானது. தான் ஈராக் பற்றிய அவரது பதிலுக்கு நான் கொடுத்த பதில் அது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மணிக்கு 500 கிலோமீற்றர் செல்லும் அதிவேக புகையிரதம்

## சீனா தயாரிப்பு



சீனாவின் அதிவேக புல்லட் ரயில்கள் உலக பிரபலம். இந்த வரிசையில் மணிக்கு 500 கி.மீ வேகம் (சிறு ரக விமானங்கள் போல) செல்லும் ரயில்களை சீன ரயில்வே உருவாக்கியுள்ளது.

இதுகுறித்து சீன ரயில்வேயின் தலைமைப் பொறியாளர் ஹே ஹுவாவ் கூறியதாவது,

மணிக்கு 500 கி.மீ வேக ரயிலை வடிவமைக்கும் இறுதிக்கட்டப் பணிகள் நடந்து வருகின்றன. அதற்கடுத்து பீஜிங் ஷாங்காய் நகரங்களுக்கு இடையில் உள்ள ரயில் பாதையில் சோதனை ஓட்டம் நடத் தப்படும்.

இதற்காக பீஜிங்- ஷாங்காய்க்கு இடைப் பட்ட ஆயிரத்து 318 கி.மீ தூர த்தில் புதிய ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் ரயில் சேவை ஆரம்பிக்கப்படும். இந்த ரயிலில் பீஜிங்கில் இருந்து ஷாங்காய் செல்ல நான்கு மணிக்கும் குறைவான நேரமே ஆகும்.

எதிர்காலத்தில் இது இன்னும் 50 ஆயிரம் கி.மீ நீளத்துக்கு அதிகரிக்கப்படும். ஐந்து இலட்சத்துக்கு அதிகமான மக்கள் தொகையுள்ள நகரங்கள் அனைத்தும் இதில் இணைக்கப்படும். நடப்பாண்டில் ஏழாயிரத்து 55 கி.மீ நீளத்துக்கு அதிவேக ரயில் பாதைகள் அமைக்கும் பணி நடந்துள்ளது. இன்னும் 10 ஆயிரம் கி.மீ நீளம் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இவ்வாறு ஹே ஹுவாவ் கூறினார். பேராசிரியர் வாங் மெங்சூ என்பவர் கூறுகையில்,

எவ்வித தடைகளும் இல்லாமல் அதிவேகத்தில் ஓடும் ரயில்களை தயாரிப்பதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

சீனாவால் எதையும் சாதிக்க முடியும் என்பதை உலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். கடந்த மாதத்தில் மணிக்கு 416.6 கி. மீ செல்லும் ரயிலை ஷாங்காயில் இருந்து ஹாங்ஜோவு நகர் வரை இயக்கி சீனா சாத னை படைத்துள்ளது.அதற்கு முன்பு 2008 ஆம் ஆண்டில் 394.3 கி.மீ வேகத்தில் செல்லும் ரயிலை பீஜிங்கில் இருந்து தியான்சென் வரை இயக்கி உலக சாதனை படைத்தது. (ஸ்ரீ-2)

# உங்களுடைய கணனி தொடர்ந்து இயங்க...

(சென்றவாரத்தொடர்ச்சி)

இலவச ஸ்பைவெயர் புரோகிராம்கள் கிடைக்கும் தள முகவரிகள் கீழே தரப்படு கின்றன.

i அட் அவெயர் பிரீ (AdAware Free): http://www.lavasoft.com/products/adaware_free.php


ii.ஸ்பைஸ்பொட் சேர்ச் அண்ட் டெஸ்ட்ரோய் (Spyspot Search &Destory): http://www.safernetworking.org/em/spybostsd/index.html

iii.விண்டோஸ் டிபெண்டர் (Windows Defender) http://www.microsoft.com/windows/products/winfamily/defender/default.mspx

மேலே கூறப்பட்டுள்ள பல வகை இலவச புரோகிராம்களை டவுண்ட்லோட் செய்திடும் முன், அவை குறித்து அந்தத் தளங்கள் தரும் குறிப்புகளைப் படிக்கவும். உங்கள் தேவைகளுக்கு எந்த புரோகிராம் உதவுமோ, உங்களிடம் உள்ள கணனியின் வடிவமைப்பிற்கு எது உகந்ததாக இருக்குமோ, அதனை டவுண்ட்லோட் செய்திடவும்.

**♦ அற்றைப்படுத்துதல் (Updating)**

கணனியைப் பாதுகாக்கும் புரோகிராம்கள் அனைத்தையும் அவ்வப்போது




அன்றைய புதுப்பிக்கப்பட்ட வழிகளைக் கொண்டு அப்டேட் செய்திடவேண்டும். பொதுவாக இத்தகைய புரோகிராம்கள், உங்கள் கணனி இணையத்தில் இணைக்கப்பட்டவுடன், தாமாகவே அவற்றின் தாய் தளம் சென்று, அற்றைப்படுத்தலுக்கான கோப்புகள் இருந்தால், சில உங்களுக்கு தகவல் தந்து, அனுமதி கேட்டு அப்டேட் செய்திடும்.

சில புரோகிராம்கள் தாங்களாகவே அப்டேட் செய்திடும்.இதில் எது உங்களுக்குச் சரி எனத் தோன்றுகிறதோ, அதன்படி அவற்றை அமைத்து இயக்கலாம்.

**♦ ரம் நினைவகத் திறன் கூட்டல்**

கணனி இயக்கத்தில் மையமாக இயங்குவது ரம்மெமரி (RAM Memory) எனப்படும் நினைவகமாகும். இங்கு தான் நம் அப்ளிகேன் புரோகிராம்கள், நாம் தயாரிக் கும் பைல்கள் தங்கி இயங்குகின்றன. நாம் கணனி வாங்கும்போது போதுமான தாகத் தோன்றும்இவை, நாளுக்கு நாள்வரும் ; புதிய சொப்ட் வெயர் தொகுப்புகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறும். இதனால் கணனி இயக்கத்தின் வேகம் குறையும்.

எனவே, இந்த மெமரியின் கொள்ளளவினை அதிகப்படுத்த வேண்டும். உங்கள் கணனியில் என்ன வகை ரம் உள்ளது என்று கண்டறிந்து, எப்படிப்பட்ட ரம் மெமரி சிப்பை வாங்கினால், கணனியின் மதர் போர்டில் இணைக்கமுடியும் என்று அறிந்து, அதனை வாங்கி இணைக்கவும்.

**♦ கோப்புகள் பாதுகாப்பு**

கணனிகள் எந்த நேரத்திலும் செயல் இழந்து முடங்கிப் போகும் என்பதால், நாம் அவற்றில் உருவாக்கும் முக்கிய கோப்புகளுக்கு, மேலதிக நகல் ஒன்று உருவாக்கி, அவற்றைப் பாதுகாப்பாக பதிந்துவைக்க வேண்டும்.

சிடி, டிவிடி, பிளாஷ் ட்ரைவ், ஹார்ட் டிஸ்க்கின் இன்னொரு ட்ரைவ் எனப் பல வகைகளில் இந்த செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.


**♦ தூய்மைப்படுத்தல்:**

இப்போதெல்லாம், மூடிய குளிரூட்டப்பட்ட அறைகளில் மட்டுமே கணனி இயக்கப்படுவதில்லை. சாலை ஓரங்களில் இயங்கும் பலசரக்கு கடைகளில் பாருங்கள். கிலோ கணக்கில் பறக்கும் தூசுகளுக்கு நடுவே தான் இவை இயக்கப்படுகின்றன. வீடுகளிலும் தூசுகளுக்கு நடுவேதான் இவை இயங்குகின்றன.எனவே எந்த அளவிற்கு தூசு அதிகமோ, அவ்வளவு குறைந்த நாட்கள் இடை வெளியில், கணனியைத் தொடர்ந்து சுத்தப் படுத்தவேண்டும்.கீபோர்டு, சிபியு, மதர் போர்டு உள்ள டவர், மவுஸ் , ஸ்கேனர், பிரிண்டர் என அனைத்தையும் சுத்தப் படுத்த வேண்டும்.

**♦ தொடர் மின் வழங்கல்**

மின்சாரம் அடிக்கடி நிறுத்தப்படுவதால், கணனிகளின் இயக்கம் திடீரென நின்று போகும். இது கெடுதலை விளை விக்கும். எனவே நல்ல யு.பி.எஸ்.ஒன்றுடன் இணைத்து மட்டுமே கணனியை இயக்க வேண்டும். கணனிகளின் இயக்கத்தை எப்போதும் முறைப்படி நிறுத்தவேண்டும்.அவசரமாக செல்லவேண்டும் என்பதற்காக, அதற்கு மின் இணைப்பு தரும் சுவிட்ச் ஆப் செய்யக் கூடாது.

# வைரஸ் பாதிப்பா? கணனியை ஒதுக்கி வையுங்கள்



பொட்நெட் (Bot net) என்னும் வைரஸ் புரோகிராமினை, அடக்கித் தடுப்பது பெரிய வேலையாய் உள்ளது. இந்த வகை வைரஸ்கள் தாக்கும் வழிகள் பல அமைந்துள்ளன. எனவே இதனை எதிர்க்கும் புதிய வழி ஒன்று குறித்து மைக்ரோசொப்ட் எண்ணி வருகிறது.

இந்த பொட்நெட் வைரஸ் குறித்து ஆராய்ச்சி செய்து வரும் ஸ்கொட் சார்னி, இதற்கான மாற்று வழியினை அறிவித்துள்ளார்.பொட்நெட் பாதித்த கணனிகளை, இணைய இணைப்பில் இருந்து ஒதுக்கி வைத்திடும் வழிகளை ஆய்வு செய்து வருகிறார். இவருடைய திட்டப்படி, ஒவ்வொரு கணனியும் இணைய இணைப்பில் இருக்கையில் சோதனை செய்யப்பட்டு ஒரு ' ஹெல்த் சேர்டிபிகேட்' வழங்கப்படும். முதலில் ஒரு கணனி அனைத்து பட்ச் பைல்களாலும் அப்டேட் செய்யப்பட்டுள்ளதா, அதன் வைரஸ் எதிர்ப்புத் தொகுப்பு அப்டேட் செய்யப்படடுச் சரியாக இயங்குகிறதா என்று அறியப்படும். பின் வைரஸ் பாதிப்பு குறித்து சோதனை நடாத்தப்படும். பொட்நெட் வைரஸ் இருப்பின் உடனே, அந்த கணனியை, ஒன்லைனிலேயே, குவாரண்டைன் எனப்படும் நோய் தடுப்பு பிரிவுக்கூடத்திற்கு ஒதுக்கப்படும்.

இது இறுதி நடவடிக்கையாகத் தான் இருக்கும். இதனால், இந்த கணனியிலிருந்து, இணையத்தில் இணைந்திருக்கும் மற்ற கணனிகளுக்கு, இந்த வகை வைரஸ்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். இந்தத் திட்டத்திற்கு பெரும் எதிர்ப்பு வரும் என்று இவர் எதிர்பார்த்திருக்கிறார். வைரஸ்கள் அதிகம் பெருகி வரும் இந்நாளில், ஒருவர் செய்யாத குற்றத்திற்கு இணையத்தடுப்பு தண்டனை என்பது அதிகம் என்று எதிர்ப்பு வரலாம். இருப்பினும் இவர் தன்னுடைய திட்டத்தினையும் நியாயப்படுத்துகிறார். எப்படி அம்மை போன்ற தொற்று நோய்க்கு எதிரான தடுப்பு ஊசி போடாதவர்கள், அந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றவர்களுக்கு இதே நோய்களைத் தர முடியுமோ அதுபோலத்தான் தடுப்பு முறை களை மேற்கொள்ளாத,வைரஸ் பாதித்த கணனிகளும் உள்ளன. எனவே நோயாளிகளை பாதுகாப்பு தடுப்பு மையங்களில் வைப்பதுபோல, கணனிகளையும் ஒதுக்கி வைப்பதில் தவறில்லை என்கிறார். அமெரிக்காவில் சில இன்டர்நெட் சேவை வழங்கும் நிறுவனங்கள், இதுபோன்ற திட்டங்களை இப்போதும் அமுல்படுத்தித் தான் வருகின்றன.

இருப்பினும், உலகம் முழுமையும் என்கிறபோது, இதனை அமுல்படுத்துவதில் தடைகள் ஏற்படலாம். இந்தத் திட்டம் முழுமையாக அறிவிக்கப்படும் போது தான் எதிர்ப்பு குறித்து நாம் அறியலாம்.




# தெரிந்து கொள்ளுங்கள்

**அட்டாச்மெண்ட் (Attachment) :**

இமெயில் மெசேஜ் உடன் இணைத்து அனுப்பப்படும் ஒரு பைல். இந்த பைல் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். படங்கள் , பாடல்கள், எமட்எஸ். ஓபீஸ் பைல்கள், சுருக்கப்பட்ட ஸிப் பைல்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு சில இமெயில் கிளயண்ட் புரோகிராம்கள் அவற்றின் வழியே அனுப்பப்படும் அட்டாச்மெண்ட் பைல்களுக்கு அதிக பட்ச அளவை வைத்துள்ளன.

மேலும் மிகப் பெரிய அளவிலான பைல்களை இணைத்து அனுப்புகையில் அவற்றை அனுப்பும் நேரமும் டவுண்ட் லோட் செய்திடும் நேரமும் அதிகமாகும்.

**க்ளொக் ஸ்பீட் (Clock Speed)**

மைக்ரோ புரோசசர் (சிப்) தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளைச் செயல் படுத்தும் வேகம் இவ்வாறு சொல்லப்படுகிறது.அதிவேக ஸ்பீட் கொண்ட புரோசசர், இந்தக் கட்டளைகளை மிக வேகமாகச் செயற்படுத்தும்.இதனால் டேட்டா அலசப்பட்டு, கட்டளைகளுக்கு ஏற்ப நமக்கு விடை கிடைக்கும்.இதனால் பயன்படுத்தப்படும் அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்பின் திறன் கூடுதலாகும்.

க்ளொக் ஸ்பீட், வழக்கமாக மெஹா ஹேர்ட்ஸ் (Megaherts MHZ) என்ற அலகிலேயே குறிக்கப்படும். இது ஒரு நொடியில் பல இலட்சக்கணக்கான துடிப்புடன் செல்லும்செயல் வேகம் ஆகும். ஜிகா ஹேர்ட்ஸ் என்பது பல நூறு கோடிகள் துடிப்பினைக் குறிக்கும்.

**ரீபூட்: (Reboot)**

கணனியை மீண்டும் ஒருமுறை புதி தாக இயக்குதல். பொதுவாக இவ்வாறு மீண்டும் இயக்குவதை ஸ்டார்ட் மெனுவில் கிடைக்கும் ரீஸ்டார்ட் மூலம் இயக்கு வார்கள். பெர்சனல் கணனியின் டவரில் ரீ ஸ்டார்ட் பட்டன் தரப்பட்டிருந்தாலும்அதனை அழுத்தியும் ரீ ஸ்டார்ட் செய்திடலாம்.

கொண்ட்ரோல்+ ஓல்ட்+ ட்லீட் கீகளை அழுத்தியும் இந்த ரீஸ்டார்ட் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

**ஹைபர்னேட் (Hybernate):**

இந்த செயல் வகையில், கணனியின் அப்போதைய இயக்க நிலை, கணனி மின் சக்திநிறுத்தப்படும் முன் (Off) ஆவதற்கு முன், ஹார்ட் டிஸ்க்கில் சேவ் செய்யப்படும். கணனி பயன்படுத்துபவர், மீண்டும் மின் சக்தியை அளித்து இயக்கத்தினைத் தொடங்குகையில்(On) கணனி ஓன் செய்கையில், ஹாட் டிஸ்க்கில் சேவ் செய்யப்பட்ட தகவல்கள் படிக்கப்பட்டு, இறுதியாக இருந்த செட்டிங்ஸ் மீண்டும் அமைக்கப்பட்டு, கணனி இயங்கத் தொடங்கும்.

ஹைபர்னெட் செயல்வகை என்பது, ஏறத்தாழ ஸ்டேண்ட்பை / ஸ்லீப் செயல் வகை போன்றதே.ஆனால் அந்த வகைளில் மின் சக்தி நிறுத்தப்படாது.

**ரெஜிஸ்ட்ரி (Registry)**

விண்டோஸ் இயக்கத்துடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ள ஒரு லைப். கணனியில் உள்ள அனைத்து ஹார்ட்வெயர் மற்றும் சொப்ட்வெயர் குறித்த தகவல்களை உள்ளடக்கிய பைல்.இதில் நாமாக மாற்றங்கள் ஏற்படுத்தும் முன் இதன் பக் அப் கொப்பி ஒன்றை எடுத்துக்கொள்வது நல்லது. புரோகிராம்களின் அடிப்படைச் செயற்பாட்டில் மாற்றங்களை மேற்கொள்ள இந்த பைலில் உள்ள வரிகளில் தான் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

**ஸ்டேண்ட் அலோன் (Stand Alone)**

ஒரு சொப்ட்வெயர் அப்ளிகேஷன் அல்லது ஹார்ட் வெயர் சாதனம், பிற எதனையும் சாராமல் தானாகச் செயலாற்றும் முறையினை இது குறிக்கிறது.

**தேர்ட் பார்ட்டி (Third Party)**

ஒரு சொப்ட்வெயர் அப்ளிஷேன் இயக்கத்தின் செயற்பாடுகளுக்குத் துணைபுரியும் வகையில், எழுதி அமைக்கும் சொப்ட் வெயரைத் தயாரித்துத் தரும் நிறுவனத்தினை இவ்வாறு அழைப்பார்கள்.

எடுத்துக்காட்டாக,விண்டோஸ் இயக்கத்தில், படங்களைப் பார்க்க, எடிட் செய்திட, வீடியோ இயக்க, எடிட் செய்திடத் தரப்படும் சொப்ட்வெயர்கள் தேர்ட் பார்ட்டி சொப்ட் வெயர் களாகும்.

**ஸ்பேம்:(SPAM)**

இது நமக்கென எழுதப்படாத ஆனால் நம் முகவரிக் அனுப்பப்படும் தேவையற்ற ஒரு தீங்கு விளைவிக்கும் மெயில் கடிதமாகும்.

இமெயில் வசதியில் ஒட்டிக்கொண்டுள்ள மிகப்பெரிய தீங்கு இதுதான். ஒருவரின் இமெயில் இன்பொக்ஸில் இவை சென்று அதன் இடத்தைப் பிடித்துக் கொள்வதுடன் கணனிக்கும் தீங்கு விளைவிக்காமல் இருக்க நாம் பயர்வோல் (Fire Wall) பயன்படுத்துகிறோம் அல்லது அண்ட்டி வைரஸ் புரோகிராம் பயன்படுத்துகிறோம்.

இவற்றின் வழியாகத்தான் அனைத்து இமெயில்களும் கடந்து செல்ல வேண்டும். இவை இரண்டும் அனைத்து இமெயில்களையும் சோதனை செய்கின்றன. இமெயி லுடன் இணைக்கப்பட்டு வரும் அட்டாச் மென்ட் என்னும் பைல்களையும் சோதனை செய்கின்றன.சந்தேகப்படும் வகையில் ஏதேனும் மெயில் அல்லது அட்டாச்மெண்ட் இருந்தால் உடனே அதனை குவாரண் டைன் என்னும் பாதுகாப்பான இடத்தில் வைத்து அது யாருக்காக அனுப்பப்பட்டுள்ளதோ அவருக்கு தகவல் தெரிவிக்கின்றன.

எறும்பைப் போல் உபதேசித்தவர் யாருமில்லை. ஆனால் அது பேசுவதே கிடையாது.

– ஃப்ராங்க்லின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பாட்டுக்கு பக்கவாத்தியமா? பாடுபவருக்கு பக்கவாத்தியமா?

"பக்கவாத்தியம் இல்லாப் பாட்டுக்கச்சேரி" என்று அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பண்டிதர் ஆறுமுகம் அவர்கள் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டார்.

பக்கவாத்தியங்கள் இல்லாமல் பாட்டுக் கச்சேரியை நடத்த முடியுமாயினும் பாட்டுக்கச்சேரி எழுப்பம் இல்லாமல் இருக்கும்.

எனவே இதிலிருந்து பாட்டுக் கச்சேரியில் பக்கவாத்தியங்கள் மிகவும் முக்கியமானவை என்பது நிரூபணமாகின்றது.

அப்படியானால் பக்கவாத்தியங்கள், பாட்டுக்கா? அல்லது பாடுபவருக்கா? என்ற கேள்வி எழும்.

குழப்பமான இந்த கேள்விக்குப் பதில் காண்பது கடினமாயினும் பாட்டுக்கு பக்கவாத்தியமிசைப்பதே கச்சேரிக்கு இங்கிதமானதாகும்.

இருந்தும் பாட்டுக்கு பக்கவாத்தியம் வாசிப்பவர்களை சில பாடகர்களுக்குப் பிடிப்பதில்லை.

மாறாக தான் பாடும் போது, ஆகா... ஓகோ... இதுவல்லோ பாட்டு, இவரல்லோ இசை மேதை என்று அடிக்கடி கூறவும், பாடகரின் அசைக்கேற்ப அசையவும், இசையவும் கூடியவர்களை நல்ல பக்கவாத்தியகாரர்களாக கருதும் கலாசாரமும் உண்டு.

இந்தக் கலாசாரத்தை இசைக் கச்சேரிகளை விட, நிர்வாகக் கச்சேரிகளில் அதிகம் காணலாம்.

தமக்கு இசைவானவர்கள் வாத்தியம் இசைக்காவிட்டாலும், அவர்களை சிறந்த வாத்தியக்காரர்களாகக் காட்டிகொள்ளும் உயர் பாடகர்களும் (உயர் அதிகாரிகள்) இருக்கிறார்கள்.

அதேநேரம் எனக்கு வாத்தியம் வேண்டாம். என்பாட்டுக்கு பக்கவாத்தியம் இசைத்தால் போதும். அப்போதுதான் என் பாட்டுக்கச்சேரியை (நிர்வாகத்தை) நல்லமுறையில் முன்னெடுத்துச் செல்ல முடியுமெனக் கருதும் தெளிவானவர்களும் இருக்கிறார்கள்.

இதில் எந்தப் பாடகர் (அதிகாரி) நல்லவர் என்பதை நீங்கள் தீர்மானித்திருப்பீர்கள்.

எனவே அதை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால் ஒரு விடயத்தை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆகவேண்டும். அதாவது பக்கவாத்தியமிசைப்பவர்கள் பாடுபவர்களுக்குப் பக்கவாத்தியமிசைக்காமல் பாட்டுக்கு மட்டுமே வாத்தியத்தை இசைக்கவேண்டும்.

அப்போதுதான் கச்சேரியை இரசிக்க வந்தவர்கள் பயன் பெறுவர். இதைச் செய்யத் தவறினால் மிகச் சிறந்த பக்கவாத்தியக்காரர்களை இழக்க வேண்டிவரும்.

இதை நாம் சொல்லும் போது பாடுகின்றவருக்கும் இசைவாக– பாட்டுக்கும் இசைவாக நடந்தால் நன்றாக இருக்குமோ என்று நீங்கள் நினைப்பதும் புரியாமல் இல்லை.

# அரசின் தேவைகளுக்காக சிங்கள மக்கள் யாழில் குடியேறுவது ஆரோக்கியமானதல்ல

## கலாநிதி கீதபொன்கலன் தெரிவிப்பு

அரசாங்கத்தின் அனுசரணையுடன் அரசாங்கத்தின் தேவைக்காக சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியேற முனைப்புக்காட்டினால்அது ஆரோக்கியமானதல்ல என கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் பீட பீடாதிபதி கலாநிதி கீதபொன்கலன் தெரிவித்தார். லக்பிம சிங்களப் பத்திரிகைக்கு அளித்த விசேட நேர்காணலின் போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மீள் குடியேற்றப்பட்ட மக்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் பிரயோகித்துவரும் அழுத்தங்கள் தளர்த்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மக்கள் அதிகளவு வளப் பற்றாக்குறையை எதிர்நோக்கவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேச மக்களுக்கு போதியளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் தங்கியிருந்தாகவும் சிங்கள மகாவித்தியாலயம் ஒன்று காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதனால் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறுவதனை எவராலும் தடுக்கமுடியாது. எனினும் அரசாங்கத்தில் அனுசரணையுடன் அரசாங்கத்தின் தேவைக்காக சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியேற முனைப்புக்காட்டினால்அது ஆரோக்கியமான நிலைமையாக கருதப்பட முடியாது. சிங்களவர்களைப் போன்றே முஸ்லிம்களும் இடம்பெயர்ந்தனர். மீள் குடியேற்ற நடவடிக்கைகளின் போது அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கம் சிறுபான்மை மக்கள் தொடர்பில் கரிசினைகாட்டி வருவதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் இவ்வாறான ஓர் பின்னணியில் மட்டுமே தமிழ் புலம் பெயர் மக்கள் வடக்கு கிழக்கில் முதலீடு செய்ய முன்வருவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் திருத்தங்களின் மூலம் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படக்கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக இந்திய வம்சாவளித் தமிழர்களும், முஸ்லிம்களும் நாடமுழுவதிலும் வியாபித்துள்ளனர். புதிய தேர்தல் முறையினால் அவர்களின் பிரதிநிதித்துவம் அற்றுப் போகக்கூடியசாத்தியம்காணப்படுகிறது.

அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு அரசுடன் இணைந்து கொண்டுள்ள தமிழ் அரசியற் கட்சிகள் தீர்வு வழங்க வேண்டும் எனவும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் பொறுப்பு ஒப்படைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (எ-5)

# போரின் போதான பாலியல் வன்முறைகள் முடிபுக்கு கொண்டுவரப்படவேண்டும்

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் வலியுறுத்தல்

போரின் போதுபாலியல்வன்முறைகள் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமாதானத்திலும் பாதுகாப்பிலும் பெண்களின் முக்கியத்துவம் தொடர்பாக ஐக்கிய நாடு கள் பாதுகாப்பு சபை யோசனையொன்றை நிறைவேற்றி 10 வருடங்கள் நிறைவுற்றுள் ளது.

இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் பாதுகாப்பு சபையில் இடம் பெற்ற கூட்டத்தின் போது ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூன் அமெரிக்கா ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் உள் ளிட்டோர் உரையாற்றினார்.

இதன் போது ஐக்கிய நாடுகளின் ஆயிரத்து 325 ஆவது யோசனை பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த கொண்டுவரப்பட்ட போதும் அது உரிய முறையில் கடைபிடிக்கப்பட வில்லை எனவும் தெரிவித்தனர்.

கிழக்கு கொங்கோ பிரதேசத்தின் 13 கிராமங்களில் 235 பெண்கள், 13 ஆண்கள், 53 சிறுமிகள் மற்றும் 3 சிறுவர்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக ஹிலாரி கிளிண்டன் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பரீட்சைப் பெறுபேறு வெளியானது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 2008/2009 ஆம் ஆண்டுக்குரிய ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. இப்பரீட்சையில் தோற்றிய அனைவரும் சித்திபெற்றுள்ளனர். பெறுபேறுகளைப் பார்வையிட விரும்புவோர் கலாசாலை நேரத்தில் அவற்றைப் பார்வையிட முடியும் என அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (ச)

# நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவுக்குழு முன் சாட்சியம்

நட்டத்தில் இயங்கும் அல்லது இலாப மீட்டத் தவறிய அரச நிறுவனங்களின் தலைவர்கள் கோப்குழுவின் (பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுகுழு) முன் விசாரணைக்கு அழைக்கப்படவுள் ளனர் என மேற்படி குழுவின் தலைவரும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

வர்த்தக ரீதியில் அமைக்கப்பட்ட சில நிறு வனங்கள் நட்டத்தில் இயங்கியதன் காரணமாக அவற்றின் நட்டத்தை திறைசேரி நிறைவு செய்துள்ளது.

திறைசேரி என்பது பொதுச் சொத்து எனவே பொதுச் சொத்துக்களை விரயம் செய்வது பொது மக்களுக்கு இழைக்கும் தீங்காகும் என்று அமைச்சர் கூறியுள்ளார். எனவே அவ்வாறான நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது முன்னாள் தலை வர்கள் தெரிவுக்குழு முன் சாட்சியம் அளிக்க வேண்டிவரும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# ஒன்றே குலம் ஒருவனே தேவன் - பாபா

நினைத்த மாத்திரம் தன்கையசைவினால் வீபூதி, பழங்கள், பூக்கள் வரவழைத்து அதன் மூலம் அடியவர்களின் தீராத நோய் தீர்ப்பவர். வறுமையைப் போக்குபவர். தன்னை நாடி வந்த அடியவர்களின் உள்ளத் தீயகற்றி நன்னெறி அளிப்பவர். எல்லாவற்றுக்கும் மேலாக பூரணைச்சந்திரனில் தனது முகவழகை உலக மக்கள் பார்த்து வியக்கும்படி செய்தவர். இவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க முடியுமா? அறவே இல்லை. இம் மனித குலத்தை நல்வழிப்படுத்த சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை எனும் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்த வந்த தெய்வம். பாபா பரப் பிரம்மம். இதை அறிந்தும், அறியாதவராகவும் அவர் யாராக இருந்தால் நமக்கென்ன என்ற அலட்சியத்தாலும்; ஆணவப் போக்காலும் மனிதகுலத்துக்குள் மனித உருவெடுத்து நடமாடும் தெய்வத்தை காணாதிருப்பது கன்ம வினையல்ல.

மரத்தில் விநாயக உருவம், மாதா சிலையில் இரத்தம், கல்லிலே புத்தர் உருவம் என்றதும் நாம் பறந்தடித்து கர்ப்பூரமோ, மெழுகுவர்த்தியோ கொளுத்தி வணங்குகின்றோம். காரணம் அன்றெழுந்த வியப்பிலான பக்தியாகும். மறுநாள் அவ்விடம் யாரும் அற்றதாகவும்; அத்தோற்றங் களுக்கு வியாக்கியானம் உரைப்பவர்களாகவும் நம்மில் பலர்.

மனிதன் மனிதனாக இருந்தால் மனிதன் என்ற தாராள பெயர் வந்திருக்கத் தேவையில்லை. மனிதன் மிருகத்தை விடப்பயங்கரமானவன். மிருகம் உய்த்துணராதது. தனது பசியிலோ, பயத்திலோதான் தீங்கு விளைவிக்கும். மனிதன் மற்றவரின் உயிரைப்போக்கிய பின்பும் அவ்வுடலை தலையில்லா முண்டமாக காட்சிப்படுத்த எண்ணுபவன்.

ஆனால் மனிதன் மாறக் கூடியவன் மாற்றப்படக் கூடியவன். இதனால்தான் மனித வடிவில் பாபா நட மாடுகின்றார். எல்லாம் வல்ல ஸ்ரீ சத்ய சாயி பாபா அண்டசரா சரங் கள் அத்தனையையும்; அவற் றில் வாழும் உயிரினங்கள் அத்தனையையும் காத்தருளும் தெய்வம். இனச்சார்பற்ற, மொழிச்சார் பற்ற, மதச் சார்பற்ற ஒவ்வொருத்தரினதும் விருப்புக்கேற்ப அல்லாவாக, புத்தராக, இயேசுவாக, சிவனாக தன்னைக் காட்டி அருள் பாலிக்கும் தெய்வம் மதமாற்றம், இனமாற்றம் தேவையில்லை. பாபாவின் அருட் கூற்றுப்படி அவரவர் தெய்வங்களை நினைத்து அல்லா சாயி, புத்தசாயி, சிவசாயி என்று வணங்குவோமாக.



காலிலுள்ள செருப்பதனைக் கழற்றுமாப் போல் நெஞ்சில் செருக்கதனை நீக்கி எண்ணி மூன்று நாள் சலனம் சபலம் இல்லாது பாபாவை நினையுங்கள். பின் நீங்கள் நினையா விடிலும் பாபா உங்களை நினைத்தருள்வார்.

ஜெய் சாய்ராம்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை அலகின் கலை முதற் தேர்வு முடிபுகள்

(நேற்றையதொடர்ச்சி)

தா.சஞ்சீவன், செல்வி. சி.சிந்துஜா, செ.சித்தார்த்தன், செல்வி.கு. சிவாஜினி, செல்வி நீ.சிவரூபி, திருமதி சி.சரிதாஷினி, ஆ.சிவசுதர்சன், செல்வி சு.ஸ்ரீவிஜயதேவி, செல்வி இ.தமயந்தி, செல்வி இ. தமயந்தி, செல்வி த.தனசனி, செல்வி வ. தர்சினி, செல்வி மா.தயாளினி, பு.தினேஷ், செல்வி கி.துளசிகா, செல்வி சி.உஷா, செல்வி க.உஷாந்தினி, ச.வாகீசன், திருமதி வா. ராஜினி, செல்வி ஜெ.வசந்தி, செல்வி ந.வதனா, செல்வி பா.விஜயவர்த்தனி, செல்வி சி.விஜிதா, செல்வி ம. வினோதினி, பா.வைகுந்தன், செல்வி ஜோ.ஜசோதா, சி. ரஜனிகாந், சி. டினேஷ்குமார், செல்வி அ.மேனசுகிதா, செல்வி நா. நிஷாந் தினி, செல்வி சி.பர்மிலா, செல்வி வே. நிமலராஜ், சி.ஸ்ரீமுருகதாஸ், திருமதி க.பிரதாயினி, தே.ஜெயதீபன், சி. மோகனராசா, ந.காமினிதேவி, ந.குணேந்திரராஜா, சி.சுகந்தன், திருமதி ஆர்.சுபாஷினி.

**இரண்டாம் தடவையாக தோற்றி சித்தியடைந்தோர்**

செல்வி லி.யூலியன் மரியகுரூஸ், செல்வி வி.அபிராமி, இ. அகிலன், செல்வி தெ.பாமினி, செல்வி பு. ஜெசிந்தா, பா.மணிக்குமார், க. சுதாகரன், செல்வி ர. சுரேஷாதேவி, செல்வி செ. ஜெயந்தினி, ச.ஜசோதரன், பா. அருள்கரன், செல்வி ஸ்ரீ. தயாளினி.

செல்வி அ.மேரிஜெனிற்றா, செல்வி வா.ஜெனிதா, க.முருகன், மு.சிவகுமார், தே.விஜயசந்திரா, இ.ஜோசப் லெஸ்லி, செல்வி. ந. சாரதா, செல்வி அ.ரோகிணி, செல்வி ர.சுதர்சினி, செல்வி தி.இந்திராணி, செல்வி தெ.அம்பிகா, திருமதி அ. கிறிஸ்ரீன் ராஜினி, செல்வி த. அனுசுயா, கி.ஜதீஸ்குமார், செல்வி. ம. ஜெந்திரன், செல்வி.க. ஜெயக்கிரிஜா, ப.கஜேந்திரன், ஞா. கருணாகரன், செல்வி. கி. மிதுனா, செ. நிமலரூபன், செல்வி ஸ்ரீ.நித்தியா, ப.பார்த்தீபன், செல்வி செ.சுபாஸ்தலா, செல்விச.வாசுகி, ச.விணோதன்.

நா.விஸ்வரூபன், செல்வி க.தர்சினி, செல்வி டே.கரோலின் கார்த்திகா, செ.ஜெ.ஜெகஜானை, செல்வி வ.சர்வோதினி, ச.சசீந்திரன், சு. சிவபாலன், செல்வி சி.தனவந்தி, செல்வி கா. துசிதா, செல்வி வே. ஜெயலலிதா, செல்வி அ.தேனுஜா, செல்வி செ.தர்சினி, அ.ஜெய மோகன்.

செல்வி சா.சுஜாதா, வி.அபிராமன், செல்வி அ.அஜந்தா, செல்வி யோ. அஜிதா, வே.பாலமுருகதாசன், பா. கஜதீபன், அ.கருணாகரன், சு. குகநாதன், செல்வி.ந. மாளவிகா, செல்வி ஜெ.நிருஷியா, செல்வி அ.சரிதா, தே.சசிகரன், ம.சதீசன், செல்வி. க.சுகந்தினி.

சி.சுதாகரன், செல்வி ச.சுதர்ஷினி, செல்வி தா.தமயந்தினி , செல்வி வே.தர்மினி, அ.விமலேசன், செல்வி பொ.வைதேகி, க.அச்சுதன், செல்வி த.டயாசா, செல்வி வி.ஜோதினி, சு. கிஷோக்குமார், செல்வி ச.லதா, செல்வி வி.பேரின்பநாயகி, செல்வி நா.ரணிதா, செல்வி வே.ரேணுகா

செல்வி சி. சாமினி, செல்வி பா. சத்தியா, செல்வி சி. சிவாஜினி, செல்வி த.சுஜிதா, செல்வி க.ஜயந்தா, செல்வி க.சுவர்ணலதா, செல்வி செ. அல்ரீன் லேசினி, செல்வி மா.அனீசா, செல்வி த. ஆன்மேரி கசில்டா

செல்வி ச.கார்த்திகா, செல்வி செ.கிரிலோஜினி, செல்வி சி.குறிஞ்சி, செல்வி சூ.லிற்வின் அன்ரனிற்றா விமல்சி, ந.மதனராஜ், செல்வி தி.நாகதர்சினி, ரா.ரசீம், ந.ரதீபன், செல்வி பா.தர்மினி, செல்வி தே. தர்சினி, செல்வி ரா.வசந்தபிரியா, ஜோ.ராஜ்குமார், செல்வி ஆ.லிற்றா, செல்வி நா.புனிதநாயகி, வை. சிவகுமார், செல்வி செ.சாரதா, செல்வி ம.பூமாலா, ரா.அரசகுலசூரியன், திருமதி ரா.குமுதினி, சூ. அகஸ்டின், பொ.ரூமினா, க.சஞ்சீவநாத், ம.ஜறீம் கிரேசியன், அருட்சகோதரி மேரி மெற்றலின் தெரேசா, அ.சத்தியானந்தன். (ஸ்ரீ-2-37)

# வடமராட்சி கிழக்கில் காலபோக நெற்செய்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள் குடி யேற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கால போக நெற் செய்கை மற்றும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இதன் ஓர் அங்கமாக மருதங்கேணி கமக்காரர் அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இந்த அமைப்பின் தலைவராக வே.சி. சிவரூபன், செயலாளராக ந.ஜெயராஜா பொருளாளர் க. வாமனரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை மருதங்கேணி கமக்காரர் அமைப்பின் பாவனைக்கென இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்று செஞ்சிலுவை சர்வதேச குழுவினரால் அண்மையில் வழங்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-64)


**பனை அபிவிருத்திச் சபை**

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

**பதவிகளுக்கான வெற்றிடம்**

பனை அபிவிருத்திச் சபையின் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) உதவி முகாமையாளர் (முகாமைத்துவமும், மனிதவளமும்)
(2) உதவி முகாமையாளர் (அபிவிருத்தி)
(3) உள்ளகக் கணக்காய்வாளர்

01. **உதவி முகாமையாளர் (முகாமைத்துவமும், மனிதவளமும்)**
**கல்வித்தகைமைகளும் அனுபவமும்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் மனித வள முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகத்துறைப் படிப்பில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் படிப்பும் அல்லது அதற்கு சமமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 05 வருட கால நிறைவேற்று தரத்தில் வேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் மனித வள முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாக துறைப்படிப்பில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் டிப்ளோமா படிப்பும் அல்லது அதற்கு சமமான தகைமையும் ,அரச நிறுவனமொன்றில் அல்லது வேறுஅங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 08 வருட கால நிறைவேற்று தரத்தில் சேவை அனுபவம்.

02. **உதவி முகாமையாளர் ( அபிவிருத்தி)**
**கல்வித்தகைமைகளும் அனுபவமும்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயத்துறையில் பட்டப் படிப்புடன் பட்டப்பின் படிப்பும் அல்லது அதற்கு சமமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 05 வருட கால நிறைவேற்று தரத்தில் சேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் விவசாயத்துறையில் படிப்பில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் டிப்ளோமா படிப்பும் அல்லது அதற்கு சமமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 08 வருட கால நிறைவேற்றுத் தரத்தில் சேவை அனுபவம்.

**ஏனைய தகைமைகள்:**
- முகாமைத்துவத்தில் சிறந்த திறமை
- பனை சம்பந்தமான துறையில் அறிவு
- மும்மொழிகளிலும் தேர்ச்சி(சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
- கணனி அறிவு

03. உள்ளகக் கணக்காய்வாளர்
ACC/CIMA of U.K அல்லது ICA of Sri Lanka இல் முழுமையாக பூர்த்திசெய்து தொழில் தகைமையில் 08 வருட கால நிறைவேற்று தரத்தில் கணக்காய்வு சார்ந்த துறையில் சேவை அனுபவம்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கியல் அல்லது வர்த்தகம் துறையில் பட்டப்படிப்புடன் பட்டப்பின் டிப்ளோமா படிப்பும் அல்லது அதற்கு சமமான தகைமையும், அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 05 வருட கால நிறைவேற்று தரத்தில் கணக்காய்வு சார்ந்த துறையில் சேவை அனுபவம்.

பொதுவானவை

**அ. வயது எல்லை:**
50 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். வயதெல்லையானது அரச/ பொதுத்துறை நிறுவனங்களில் சேவையில் உள்ளவர்களுக்கு பொருந்தாது.

**ஆ. மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**
MM1- 1ரூபா 25,640- 3X 665-7X 735-15X 925- 46,655

**இ. நியமனத்தின் தன்மை:**
நிரந்தரமானது

**ஈ. தேர்வு முறை:**
விண்ணப்பதாரி சுய விபரக் கோவை ஆய்வு ,திறனாய்வு மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்.

**உ. பொதுவான நிபந்தனைகள்:**
i.தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை ஆவணங்களின் பிரதிகளுடன் "**தலைவர், பனை அபிவிருத்திச் சபை,தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம்,யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கு 15.11.2010 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.
ii.அரச/ பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்கள் அரச நிறுவனங்களில் தொழில்புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களின் பிரதிகளுடன் அந்நிறுவனங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும்.
iii.இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் தனது மாதாந்த சம்பளத்தில் 8 சதவீதம் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்வதுடன் , ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதிக்கு முறையே 12 சதவீதமும், 3 சதவீதமும் சபை பங்களிப்பு செய்யும்.
iv.பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமையும்.
v.மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளையும் தகைமைகளையும் உள்ளடக்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(சி/1482)


# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இரு பெண்களுக்கு ரூ.5 இலட்சம் அபராதம்

(கரவெட்டி)

துன்னாலை தெற்கைச்சேர்ந்த இரு பெண்கள் வெவ்வேறு கசிப்பு வழக்குகளில் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

இருவருக்கும் எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டன.

கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு தயாரித்தமை, கசிப்பு உபகரணங்கள் வைத்திருந்தமை, கோடா வைத்திருந்தமை போன்ற நான்கு குற்றச்சாட்டுக்களையும் மன்றில் விசாரித் த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா குற்றவாளி மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமை யால் நான்கு குற்றத்திற்கு தலா 50 ஆயிரம் வீதம் 2 இலட்சம் ரூபா அபராதம் செலுத்தத்தவறின் 2வருட கால சிறைத்தண்டனையும் வழங்கியதுடன் இக்குற்றவாளி ஏற்கனவே குறித்த காலத்திற்குள் மன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டமையால் மேலும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 1வருட காலசிறைத்தண்டனையும் அனுபவிக்கவேண்டும் என்று உத்தரவிட்டார்.

மற்றுமொரு குற்றவாளிக்கு 4 குற்றத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 2 இலட்சம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 வருட காலசிறைத்தண்டனையும் வழங்கி எச்சரித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-24)


ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றதையிட்டு மன நிறைவு கொள்கின்றோம்

V.S.P மார்க்
சுத்தமான நல்லெண்ணெய்

தயாரிப்பாளர்கள் :
பரிமளா ஸ்ரோர்ஸ் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

# உலக லெவின் டெஸ்ட் அணியில் இணைத்தது வியப்பாக உள்ளது

## டெண்டுல்கர் பெருமிதம்

(புதுடில்லி)

உலக லெவின் டெஸ்ட் அணியில் பிரட்மனுடன், என்னையும் சேர்த்து இருப்பதை நம்பவே முடியவில்லை. அதிக வியப்பை தரும் இது மிகவும் சிறப்பு வாய்ந்தது என இந்திய கிரிக்கெட்டின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் அரங்கில் சிறந்து விளங்கிய 11 டெஸ்ட் வீரர்களின் பட்டியலை, ஈ.எஸ்.பி. என்., "கிரிக்கின்போ' இணையதளம் வெளியிட்டது. இதில் நான்கு அவுஸ்திரேலிய வீரர்கள், மூன்று மேற்கிந்திய தீவுகள், இரண்டு இங்கிலாந்து, மற்றும் ஒரு பாகிஸ்தான் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். தற்போதுள்ள வீரர்களில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மற்றபடி, அவுஸ்திரேலியாவின் பொண்டிங், மெக்ராத், மேற்கிந்தியதீவுகளின் பிரையன் லாரா, இந்தியாவின் கபில் தேவ், கவாஸ்கர் ஆகியோருக்கு இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் டெஸ்ட் அரங்கில் முதன் முறையாக 14 ஆயிரம் ஓட்டங்களை கடந்து, 50 சதத்தை அடித்த முதல் வீரர் என்ற சாதனையை விரைவில் படைக்க காத்திருக்கும் சச்சின் டெண்டுல்கர் (37), உலக லெவின் அணி குறித்து கூறியதாவது.

கிரிக்கெட் ஜாம்பவான்கள் நிறைந்த ஒரு கனவு அணியில் விளையாடுவது என்பது, மிகப்பெரிய வாய்ப்பு ஆகும். டெஸ்ட் போட்டியின் உணவு இடைவேளைக்குப் பின் பிரட்மனுடன் இணைந்து களமிறங்குவது அல்லது விவியன் ரிச்சர்ட்சுடன் சேர்ந்து சிறப்பான இணைப்பாட்டம் அமைப்பது, கேரி சோபர்சுடன் இணைந்து கிரிக்கெட் குறித்து விவாதிப்பது போன்ற வித்தியாசமான அனுபவங்கள் இதில் கிடைக்கும்.

இதுபோல மற்ற வீரர்களுடன் இணைந்து கிரிக்கெட் குறித்து உரையாடலாம். ஜேக் ஹாப்ஸ், லென் ஹட்டன் போன்ற வீரர்கள், தங்களது காலத்தில் எதிர்கொண்ட சிறப்பான பந்துவீச்சாளர்கள் மற்றும் கிரிக்கெட் தன்மைகள் குறித்தும் தெரிவிக்குமாறு கேட்கலாம்.

**வியப்பு தருகிறது**

இதற்குமுன் நான் மல்கம் மார்ஷலுடன் கவுன்டி போட்டியில் பங்கேற்றுள்ளேன். ரிச்சர்டுடன் கண்காட்சி போட்டியில் விளையாடியுள்ளேன். என்னுடைய 12 வயதில் முதன் முதலாக டென்னிஸ் லில்லியை சந்தித்துள்ளேன். பின் 15 வயதில் எம்.ஆர்.எப்., பவுண் டேசனில் இருந்த போது, டென்னிஸ் லில்லி, எனக்கு பந்துவீசியுள்ளார். இது மிகவும் "திரில்லான' அனுபவம் ஆகும்.


இப்போது இவர்கள் எல்லாம் உள்ள அணியில் நானும் இணைந்திருப்பது போன்றது மிகவும் கற்பனையான வியப்பான அனுபவத்தை தருகிறது.

இவ்வாறு சச்சின் தெரிவித்தார்.

**அக்ரம் மகிழ்ச்சி**

அணியில் இடம் பெற்றது குறித்து பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வாசிம் அக்ரம் கூறியபோது,

பாகிஸ்தான் அணிக்காக விளையாடுவேன் என, எப்போதும் நான் நினைத்ததில்லை. இந்நிலையில் பாகிஸ்தானில் இருந்து உலக லெவின் அணியில் நான் மட்டும் இடம்பெற்றிருப்பது மிகவும் "ஸ்பெஷலான' அனுபவம். இதே அணியில் பிரட்மென், கேரி சோபர்ஸ்,



ரிச்சர்ட்ஸ், சச்சின் போன்றவர்களையும் தேர்வு செய்திருப்பது பெருமையாக உள்ளது.

நான் பார்த்ததில் இம்ரான் கான் சிறந்த பந்துவீச்சாளர் என்பதில் சந்தேகம் இல்லை. அதேபோல, டென்னிஸ் லில்லியும் அசத்தலான பந்துவீச்சாளர்தான். ஆனால் இங்கிலாந்து, இந்திய துணைக்கண்டம் மற்றும் அவுஸ்திரேலியா என உலகின் பல இடங்களிலும் சிறப்பாக செயல்பட்ட மல்கம் மார்ஷல் தான் என்னைப் பொறுத்தவரையில் சிறப்பான பந்துவீச்சாளர்கள் என நினைக்கிறேன் இவ்வாறு வாசிம் அக்ரம் கூறினார்.

இதேபோல உலக லெவின் அணியில் விக்கெட் காப்பாளராகவும் துடுப்பாட்ட வீரராக இடம் பெற்றுள்ள அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் கூறுகையில்,

கனவு அணியில் நான்கு அவுஸ்திரேலிய வீரர்கள் இடம் பெற்றுள்ளது பெருமையாக உள்ளது என்றார்.

## ஷரபோபாவின் நிச்சயதார்த்த மோதிரம் ரூபாய் மூன்று கோடி

(வாஷிங்டன்)

பிரபல ரஷிய டென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவாவுக்கும், சுலோவேனியா கூடைப்பந்து வீரர் சஷா உஜாசிச்சுக்கும் சமீபத்தில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. ஷரபோவாவுக்கு சஷா அணிவித்த நிச்சயதார்த்த மோதிரத்தின் விலை தெரிய வந்துள்ளது. அதன் விலை இலங்கை ரூபாயில் 3 கோடியாகும். அது வைரம் பதிக்கபட்ட பிளாட்டின மோதிரமாகும்.

## மெனிக்பாமில்...

சலம் முகாமிற்குள் பௌத்த விகாரை யொன்றை அமைக்கும் விருப்பத்தில் குறித்த பகுதிக்குள் சென்று சில இடங்களை புகைப்படமெடுத்து அதனை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இவ்விடத்தில் புராதன காலத்தில் கி.பி.300 ஆண்டுகளுக்கு முன்னர் மல்வத்து ஓயாவிற்கு அருகில் 3 புத்த தூபிகள் இருந்ததாகவும் ஆனால் அவை உடைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியிடம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இவ்விடத்தில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட வேண்டும் எனவும் குறித்த பிக்கு வலியுறுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் குறித்த இடத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கு அப்பகுதியைச் சூழவுள்ள 8 ஏக்கர் பரப்பளவுவுள்ள காணி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இப் பகுதி புண்ணிய பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க பௌத்த விகாரை அமைக்கும் நடவடிக்கையின் ஆரம்ப கல் வைக்கும் விழாவில் மல்வத்து பீட அஸ்கிரிய மஹாநாயக்க தேரர் கலந்து கொள்ளவுள்ளதாகவும், இதற்கு அவருக்கு கடிதமொன்றும் அனுப்பப்பட்டுள்ளதுடன் அவரும் இதற்கு இணங்கியுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-1)

## போக்குவரத்து விதியை மீறுவோரின் வால்வ்ரியூப்பை கழற்றும் பொலிஸார்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வழிப்பாதையூடான போக்குவரத்து விதிமுறைகளை மீறி சைக்கிளில் செல்வோரின் "வால்வ்ரியூப்பை" பொலிஸார் கழற்றி எறிவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்று மதியம் கே.கே.எஸ் வீதியூடாக யாழ்.நகரப்பகுதியிலிருந்து வெளியேறியவர்களின் "வால்வ்ரியூப்" களை கழற்றிய பொலிஸார் அதனை உரியவர்களிடம் ஒப்படைக்காமல் எறிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மாலை வேளைகளில் இவ்வீதிகள் ஊடாக போக்குவரத்து விதிகளை மீறிச் செல்லும் வாகனங்களை பொலிஸார் கண்டு கொள்வதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## க.பொ.த.சாதாரண பரீட்சை முடிந்ததும் முன்னாள் போராளிகள் 43 பேர் விடுதலை

எதிர்வரும் கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சை முடிந்ததுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் பெண் போராளிகள் 43 பேர் விடுதலை செய்யப்பட உள்ளார்கள் என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

சரண் அடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்தபோது அவர் அவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு தற்போது 5ஆயிரத்து 100 முன்னாள் புலிகள் புனர்வாழ்வு பெறுகின்றார்கள். இவர்களில் 93 பேர் பெண்கள்.

இம்முன்னாள் பெண் புலிகளில் 43 பேர் இம்முறை க.பொ.த சாதாரண பரீட்சை எழுதுகிறார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக இடம் பெறும் என்றார். (ச-5)

## உள்ளூராட்சி சட்டமூலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

அண்மையில் இலங்கை அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி சட்ட மூலங்களுக்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று உயர் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா, சட்டத்தரணி மோகன் பாலேந்திரா மூலம் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

உள்ளூராட்சி அதிகார சபை விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம், மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் திருத்த சட்ட மூலம் ஆகியவற்றை ஆட்சேபித்தே தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று இரண்டு ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்தது.

இந்த இரண்டு சட்ட மூலங்களும் இலங்கையின் அரசியல் அமைப்பின் உறுப்புரிமை 154 ஜீ 3 க்கு இணங்காதிருப்பதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலங்கள் மாகாண சபைகளின் பங்குபற்றலுடன் கொண்டுவரப்படல் வேண்டும். எனினும் வடக்கு மாகாண சபை இயங்காத சூழ்நிலையில் அதன் அபிப்பிராயம் இந்தச் சட்டமூலங்களுக்காக பெற்றுக் கொள்ளப்படவில்லை என கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# தனிநபர் வருமானத்தை அதிகரிக்க அரசு திட்டம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

ஐந்து வருடங்களில் நாட்டின் தனிநபர் வருமானத்தை 4ஆயிரம் டொலராக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார யுத்தத்தில் வெற்றிகொள்ள நவீன தொழில்நுட்ப மேம்பாட்டுக்காக அமைச்சினால் வகுக்கப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கும் இந்நிகழ்வு நேற்று காலை தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. நெனோ தொழில்நுட்பக் குழு தலைவர் பேராசிரியர் அஜித் டி சில்வா, பேராசிரியர் சிறிமலி பெர்னான்டோ உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள், புத்திஜீவிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது நாட்டு மக்களின் சுபீட்சத்துக்கான பொருளாதார யுத்தத்தை ஆரம்பித்துள்ளார்.

அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தொழில் நுட்ப ஆராய்ச்சி அமைச்சு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது. இதனை ஜனாதிபதியும் அங்கீகரித்துள்ளார். தொழில்நுட்பப் புரட்சியின் மூலமே நாட்டின் பொருளாதார வெற்றியை அடைய முடியும். தொழில் நுட்பத்தில் நவீன முறைகளைக் கையாண்ட நாடுகளே இன்று முன்னேற்றம் அடைந்த நாடுகளாகக் காணப்படுகின்றன.

கடந்த வருடம் நாட்டின் தனிநபர் வருமானம் 2ஆயிரத்து 54 டொலராகும். அதனை 4ஆயிரம் டொலராக அதிகரிக்கச் செய்வதே எமது நோக்கமாகும். அதன் மூலம் எமது நாட்டை நடுத்தர வருமானமுள்ள நாடுகளுக்கு மத்தியில் கொண்டு செல்வதே குறிக்கோள் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

பொருளாதார அபிவிருத்தியின் இரகசியம் தொழில்நுட்ப வளர்ச்சி என்பதே ஆகும். 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் தொழில்நுட்ப புரட்சி ஆரம்பமானது. 1960 இல் இலத்திரனியல் மேற்கொள்ளப்பட்டது. அடுத்து 1980களில் தகவல் தொழில்நுட்பம், அதனையடுத்த உயிரி தொழில்நுட்பம், தற்போது நனோ தொழில் நுட்பம், மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நனோ தொழில்நுட்ப திட்டத்துடன் உலக சந்தையில் பாரிய சந்தை வாய்ப்பைப் பெறுவதே அரசின் தற்போதைய நோக்கமாகும். தேயிலையை உலக சந்தை அனைத்துக்கும் கொடுப்பதால் கிடைக்கும் வருமானத்தை நனோ தொழில்நுட்ப உற்பத்திப் பொருள் ஒன்றின் மூலம் பெற முடியும். சிறிதளவு நனோ தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் பெரியளவு வருமானத்தைப் பெற வாய்ப்பிருக்கின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# சந்திரிகா கொலை முயற்சி...

கூட்டம் ஒன்றின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாய க்க குமாரதுங்கவை இலக்கு வைத்து 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உதவி ஒத்தாசை வழங்கினார் என்ற வழக்கில் கொழும்பு நீதிமன்றம் சத்தியவேல் இலங்கேஸ் வரன் (வயது 30) என்கிற இளை ஞனுக்கு கொழும்பு மேல்நீதிமன் றம் 290 வருட கடுழிய சிறைத் தண் டனை வழங்கி தீர்ப்பளித்தது.

இத்தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க வின் கண் ஒன்று பறிபோனது. பிர திப் பொலிஸ் மா அதிபர் ஒருவர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், சில பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரி ஒருவர், பௌத்த பிக்கு ஒருவர், சிவிலியன்கள் ஆகி யோர் உட்பட 26 பேர் கொல்லப்பட்ட னர். 80 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல் சம்பந்தமாக நால்வருக்கு எதிராக கொழும்பு நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய் யப்பட்டு 2002ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி குற்றப்பத்திர மும் தாக்கல் செய்யப்பட்டது.

வேலாயுதன் வரதராஜா (உத யன்),சத்தியவேல் இலங்கேஸ்வரன், பூசகர் எஸ்.ரகுபதிசர்மா, பூசகர் ரகு பதிசர்மாவின் மனைவி சந்திரா ரகு பதி ஆகியோரே வழக்கின் எதிரிகள். இத்தாக்குதலுக்கு உதவி ஒத்தாசை வழங்கினர். 26 பேரின் மரணங் களுக்கும் 80 பேரின் படுகாயங் களுக்கும் காரணமாகினர். நாட்டின் முதல் பிரஜையை கொல்லச் சதித் திட்டம் தீட்டி இருந்தனர். ஆகியன உட்பட 110 குற்றச்சாட்டுக்கள் இவர் கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

எதிரிகளில் ஒருவரான இலங்கேஸ் வரன், அவருக்கு எதிரான குற்றச்சாட் டுக்களை ஒப்புக்கொண்டு விட்டார்.

இத் தற்கொலை தாக்குதலுக்கு தேவையாக இருந்த வெடிகுண்டை புத்தளத்திலிருந்து முஸ்லிம் வர்த் தகர் ஒருவருடைய வாகனத்தில் கொழும்புக்கு கடத்திவந்தார் என்று நீதிமன்றில் சட்டத்தரணி மூலம் ஒப்புக்கொண்டு குறைந்தபட்ச தண் டனை வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இவ் வழக்கை விசாரித்து வரும் நீதிபதி ரி.எம்.பி.வி.வெரவெல இவ ருக்குநேற்று 290வருட கடூழியசிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

சட்டமா அதிபரின் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கபில விஜே வர்தன ஆஜராகி வாதாடி வருகிறார். இவ்எதிரியின்சார்பில்சட்டத்தரணிரவீந் திர டீ சில்வா ஆஜராகினார். (ச-5)

# விளம்பர...

தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள காவலரண் கள் அகற்றப்பட்டுள்ளன.

கொழும்புநகர எல்லைக்குள் இருக் கும் ஏனைய காவலரண்கள் அனைத் தும் அடுத்த சில தினங்களில் அகற்றப் படவுள்ளன எனவும் இராணுவப் பேச் சாளர் கூறியுள்ளார். (ச-5)

# வாக்காளர் பதிவு...

விட்டது.

இப்போது திணைக்களம் பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை தயாரித்து வருகின்றது.

உள்ளூர் அதிகாரிகள் பெயர் களை பதிய தவறியிருப்பின் பாதிக் கப்பட்டவர் எமக்கு அறிவிக்கலாம் என பிரதி தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசபிரிய கூறினார்.

நவம்பர் மாதத்திற்கு முன்னர் தேர்தல் உத்தியோகத்தர்கள் வடக்கின் வாக்காளர் பதிவு நடவடிக் கையை முடித்துவிட வேண்டும் என வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் கூறி னார்.

டிசம்பரில் வாக்காளர் பதிவில் ஏதாவது பிழைகள் காணப்படின் முறைப்பாடு செய்யலாம்.

வெளிநாட்டில் வதியும் யாழ். மாவட்ட மக்களின் பெயர்கள் வாக் காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ச-5)

# போர்க் குற்றங்கள் தொடர்பில்...

இலங்கையின் அந்தஸ்தை சர் வதேச மட்டத்தில் உயர்த்துவதற்கு மக்கள் தொடர்பு நிறுவனம் ஒன் றை பயன்படுத்தி எவ்வளவு முயற் சிக்கின்ற போதிலும், அங்கு படுகொ லைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடந்ததாக மேலும் ஆதா ரங்கள் வந்துகொண்டிருக்கும் நிலை யில் அவை குறித்து உறுதி செய் வதற்கு ஒரு சர்வதேச பக்கசார்பற்ற விசாரணை அவசியம் என்ற தனது கருத்துடன் பிரிட்டிஷ் பிரதமர் உடன் படுகின்றாரா என்று நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டிருந்தார்.

இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்ற குற்றங்களை மறைக்க அரசாங்கம் வெளித்தோற்றத்தில் எவ்வளவு அந்தஸ்து பிரசாரம் செய்தாலும் தற்பொழுதும் நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருகின்றன. எனவே இதற் காக பக்கசார்பற்ற சர்வதேச புலன் விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும். இதற்கு பிரிட்டன் தனது ஆதரவை வழங்கும்.

இவ்விசாரணைகளை ஐ.நா. மூலம் நடத்துவதற்கு சீனா ,ரஷ்யா போன்ற நாடுகள் முரண்பாடான கருத்துக்களை கொண்டுள்ளன . எனவே ஐ.நா.விசாரணையை விட சர்வதேச தரத்திலான ஒரு பொது வான புலன்விசாரணையை நடத்து வதன் மூலம் போர்க் குற்றங்களை இனங்கண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

அரசாங்கத்தினால் அமைக்கப் பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழு விசாரணையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவை பக்கசார் பற்ற முறையில் நடத்தப்பட்டிருக்க முடியாது. ஏனெனில் சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் சாட்சியமளி க்க மறுத்துள்ளன. எனவே இவற் றைவிட சர்வதேச தரத்திலான விசா ரணைகளை மேற்கொள்வதே அவ சியம் எனவும் டேவிட் கமரூன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ் விடயம் குறித்து பி.பி.சி யிடம் பேசிய நாடாளுமன்ற உறுப் பினர் சிவோன் மக்டொனால்ட்டிடம் , இந்த விடயத்தில் பிரிட்டன் தான் அங்கம் வகிக்கும் ஐ.நா.பாதுகாப்பு சபையின் ஊடாக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாதா என்று கேட்டதற்கு பதிலளித்தபோது, ஐ.நா பாதுகாப்பு சபையில் ரஷ்யாவும், சீனாவும் இந்த விடயத்தில் முர ணாக இருக்கும் நிலையில் அது சிரமம் என்று கூறினார்.

அதேவேளை இலங்கை அர சாங்கத் தினால் நடத்தப்படும் படிப் பினைகள் மற்றும் நல்லிணக் கத் துக்கான ஆணைக்குழுவின் விசா ரணையின் மூலம் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து உறுதி செய்ய முடியாது என்றும் அந்த விசாரணை பக்கசார்பற்றவகையில் நடக்கும் என்ப தில் தமக்கு நம்பிக்கை கிடையாது என் றும் சிமோன் மக்டொனால்ட் கூறி னார். (ச-5)

# செல்வா சதுக்கத்திலிரு...

எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தென்னை மரத்திலிருந்து இள நீர் வெட்டப்பட்டுள்ளது. பூ மரங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.

தமிழ்மக்களால் புனிதமாக பேணப் பட்ட தந்தை செல்வா சதுக்கத்துக்குள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற் றுள்ளமை கவலையளிப்பதாக அவர் தெரிவித்தார். கடந்த சனிக்கிழமையே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த சனிக்கிழமை யாழ்.நூலக த்தை பார்வையிட தென்னிலங் கையிலிருந்துவந்த சுற்றுலா பயணி களுக்கும் நூலக காவலர்களுக்கு மிடையே முறுகல் நிலை ஏற்பட்ட மை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இந்திய...

அனுமதியின்றி உடுபுடைவை வியா பாரத்தில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்திருந்தது.

அத்துடன் ஏனைய மாவட்டங் களில் இவர்களு க்கு எதிராக சட்ட நடவடிக்கைகளு ம் மேற் கொள்ளப் பட்டன.

இந்நிலையில் நேற்று அதிகாலை 4.30மணிக்கு வெள்ளை வானில் சிவில் உடையில் வந்த குழுவினர் யாழ்.நகர் விடுதி களில்தங்கியிருந்த 20 இற்கும் மேற் பட்ட இந்திய வியா பாரிகளின் கடவுச் சீட்டுகளை பறிமு தல் செய்ததுடன் அவர்களையும் அழைத்துச் சென் றுள்ளனர்.

எனினும் இவ் வாறு அழைத்துச் செல்லப்பட்ட இந் திய வியாபாரிகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட வில்லை என பொ லிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை சுற்றுலா விசாவில் வந்து அனுமதி யின்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்திற் காக இலங்கை புல னாய்வுப் பிரிவின ரே விசாரணைக் காக மேற்படி இந் தியவியாபாரிகளை அழைத்துச்சென்றி ருக்கலாம் என தெரிவிக்கப்பட் டது. (ச-5)

# ஜனாதிபதி ஆணைக்குழு...

9.00 மணிக்கு தெல்லிப்பழை, உடு வில் பிரதேச செயலகபிரிவு மக்களி டம் அளவெட்டி மகாஜனசபை மண்ட பத்திலும் மாலை 4.00 மணிக்கு சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் காரைநகர் பிரதேச செயலக பிரிவு மக்களிடம் சித்தன்கேணி மகளிர் அபிவிருத்தி சங்க மண்டபத்திலும் சாட்சியங்களைபதிவு செய்யவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதிகாலை 9.00 மணிக்கு பருத்தித்துறை மரு தங்கேணி பிரதேச செயலக பிரிவு மக்களிடம் குடத்தனை தேவா லயத்திலும், பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக பிரிவு மக்களிடம் நெல்லியடி முருகன் கோயிலிலும் மாலை 3.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவு மக்களிடம் சாவகச்சேரி கலாசார மண்டபத்திலும் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும்.

இறுதி நாளான எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களிடம் ஊர்காவற்றுறை புனித அந்தோ னியார் தேவாலயத்திலும், மாலை 4.30 மணிக்கு வேலணை பிரதேச செயலக பிரிவு மக்களிடம் மண்கும் பான் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்திலும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு சாட்சியங் களை பதிவு செய்யவுள்ளது. (ச-5)

# கிளிநொச்சி கல்வி வல...

குச் சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப் பின் இணைச் செயலரும் பேச்சா ளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கல்விப் பணிப்பாளரையும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த உத்தி யோகத்தர்களையும் சந்தித்துக் கலந் துரையாடினார்.

இதேவேளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் பதவிக்கா லம் இன்னும் ஒருவருடமே உள்ள நிலையில் அவரின் இடமாற்றத்தை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டிருப் பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)


www.westminsteredu.com 0771919192

**STUDY IN UK**

15 வருட அனுபவமிக்க ஆலோசகர்களால் சட்டத்தரணிகளின் வழிகாட்டலில் மிகச்சிறந்த முறையில் ஆவணமுறைப்படுத்தப்பட்டு விண்ணப்பிக்கப்படும்,

மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!

UK-London இல் அரச அங்கீகாரமுடைய கல்லூரிகளுக்கு அதிகமான மாணவர்களை கற்கை நெறிகளுக்காக அனுப்பிய பெருமைக்குரிய எங்கள் கல்லூரி யாழ் மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்தில்.

- குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது..
- IELTS தேவையில்லை, விசேட ஆங்கில வகுப்புக்களுண்டு.
- Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
- மாணவர்களுக்கான ஆலோசனைகள் இலவசம்.

ENGLISH COURSES - விசேட ஆங்கில வகுப்புகள்

- IELTS - Training Classes - (01 Month)
- Certificate in Spoken English - (02 Month's)
- Certificate in General English - (02 Month's)

முற்றிலும் Brittish Council ஆல் பயிற்றுவிக்கப்பட்ட, அனுபவமுடைய ஆசிரியர்களின் வழிகாட்டலில் கற்பிக்கப்பட்டு சர்வதேச பல்கலைக்கழக அங்கீகாரம் கொண்ட சான்றிதழ் வழங்கப்படும்

CTH TRINITY

Vitoria College of London.
London Richmond College.
Thames College of London.



Tele : 0213207778 - 0771919192

WIIHE Westminster International Institute of Higher Education

**WESTMINSTER**
INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junctio
Thirunelveli, Jaffna.
(2754)



**மாதாந்தம் ரூபா 30,000.00 ஐ விட அதிக சம்பளத்துடன் வாழ்வில் முன்னேறத் தயாராகுங்கள்!!!**

'எடிசலாட்' விற்பனை மேம்பாட்டு அதிகாரி

- நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா?
- நுகர்வோருடன் பேசி விற்பனையை மேம்படுத்த விருப்பமுள்ளவரா?
- தொழிற் பயிற்சிகள் , சலுகைகள் பெற ஆர்வமுள்ளவரா?
- இலங்கையின் முதற்தரமான தொலைபேசி நிறுவனத்தில் பணியாற்றி , வாழ்வில் முன்னேற விருப்பமுள்ளவரா?

அப்படியாயின் நாங்கள் தேடுபவர் நீங்கள்தான்!

- சுயமாக தயாரித்த சுயவிபரக் கோவையுடன்,( BIO-DATA)
- வார நாட்களில் மு.ப.08.30-பி.ப.02.00 மணிவரை
- கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(கி-1481)

விபரங்களுக்கு அழையுங்கள்: Mr.H.Mohamed 07 22 465478

விரைந்து வாருங்கள்: P&R TELECOM JAFFNA (PVT)LTD 127,MPCS BUILDING K.K.S.ROAD,JAFFNA. 021 2221644


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.